உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

## ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

[தொகுதி-௩௯.] விஷு ௵ மாசி ௴ [பகுதி-௪.
Vol. 39. February — March 1942. No. 4.

உள்ளுறை.

| | | |
|---|---|---|
| கம்பராமாயண சாரம்:— | ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார், G.B.V.C. | ௧௯௯—௨௦௦ |
| பிழைதிருத்தம்:— | | ௨௦௦ |
| ஆராய்ச்சியின் ஆராய்ச்சி:- | ஸ்ரீ. S. S. பாரதியார், M.A., B.L. | ௨௦௧—௨௨௨ |
| மதிப்புரை:— | | ௨௨௩—௨௨௪ |

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1942.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by Thiru. Narayana Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.

# ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவை சம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

---

## மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

### I. சங்கப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஞானாமிர்த மூலமும் உரையும் ... ... | 1 | 0 | 0 |
| 2. | சைவமஞ்சரி ... ... ... | 1 | 8 | 0 |
| 3. | *யாப்பணியிலக்கணங்கள் ... ... ... | | | |
| 4. | வைத்தியசாரசங்கிரகம் ... ... ... | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு ... ... ... | 3 | 0 | 0 |
| 6. | மகாபாரதம் அரும்பதவுரையுடன் ... ... | 4 | 0 | 0 |
| 7. | *தோத்திரத்திரட்டு ... ... ... | | | |
| 8. | *தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம். | 6 | 0 | 0 |
| | *ஷை இரண்டாம்பாகம் ... ... ... | 4 | 8 | 0 |
| | ஷை மூன்றாம்பாகம் ... ... ... | 5 | 0 | 0 |
| 9. | *அபிதானசிந்தாமணி ... ... ... | | | |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) ... | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் ... ... ... | 0 | 6 | 0 |
| 12. | அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ் ... ... | 0 | 8 | 0 |
| 13. | கலைசைச்சிலேடைவெண்பா ... ... | 0 | 6 | 0 |
| 14. | *தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ... | | | |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை ... ... | 0 | 4 | 0 |
| 16. | ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம் ... ... | 1 | 4 | 0 |
| | பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ... ... | 0 | 4 | 0 |
| | திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ... | 0 | 1 | 0 |

---

உ
கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி—ஙகூ.] விஷு ஆண்டு மாசி மீ [பகுதி — ச.
Vol. 39. February — March 1942. No. 4.

## கம்பராமாயணசாரம்

[ராவ்ஸாகிப் ஸ்ரீ. வெ. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள், G.B.V.C.]

கஉ0-ஆம் பக்கத் தொடர்ச்சி.

### இராவணன் தேரேறுபடலம்

இராவணன் இராமனுடன் போர்செய்தற்குத் தேரிலேறுதலைக் கூறுவது.

#### இலங்கைச்சேனை எழுதல்

இராவணன், செந்நெருப்புப்போன்ற செங்கண்களும் நெருப்புக்குமேலாகத்தோன்றுங் கரும்புகைபோன்ற கரும்புருவங்களுமுடைய மகோதரனை நோக்கி 'இலங்கையிலே இறந்ததுபோக எஞ்சியிருக்கிற சேனையை எழுப்ப ஆனைமேல் முரசறைவிப்பாயாக' என்றான். அவன் அவ்வாறுசெய்யப் பதினான்குநூறுகோடி பதாதிப்படை திரண்டது. குதிரைப்படை யானைப்படை தேர்ப்படைகளும் திரண்டன. அந்தப்படைகள் வெளிப்புறப்பட்டதனால், இலங்கை வெறிதாகி நீர்வற்றிய கடல்போன்றது.

#### இராவணன் போர்க்கோலம் பூணுதல்

இராவணன், சிவபூசைசெய்து தானங்கள்வழங்கிப் போர்க்குப் புறப்படலானான். பிரமதேவன் யாகஞ்செய்து படைத்ததும் இந்திரன் தந்ததுமான இரத்தினமிழைத்த கவசமணிந்து, ஆயிரஞ் சூரியருதயமாகப்பெற்ற பெரிய கரிய பருவதம்போன்றான். மந்தரமலையை வளைந்த வாசுகிப்பாம்புபோல இடுப்பைச்சுற்றிக் கட்டிய

பொற்கச்சிலே வலப்புறத்திலே வாளைச் சொருகினான். மேருமலையைச்சூழ்ந்த கிரகமண்டலம்போல இடுப்பைச்சுற்றி இரத்தினகசிதமான அரைநாண் அணிந்தான். முறுக்கமைந்த வெண்பட்டாடையைக் கருடனது விரிந்த சிறகுபோலக் கொய்சகமமைய உடுத்தான். மின்னல்கள்போலப் பேரொளியுடைய இரத்தினங்களிழைக்கப்பெற்றனவும் சிங்ககர்ச்சனைபோல ஒலிப்பனவும் மலர்வடிவுடையனவுமான சதங்கைகளைத் தாள்களிலே தரித்தான். இடியிடிக்கும்போது பாம்புகள் அடையும் கலக்கத்தை மண்ணுலகிலும் விண்ணுலகிலுமுள்ளவரெல்லவரும் அடையும்படி ஒலிக்கின்ற வீரக்கழல்களைக் காலிற் பூட்டினான். முன்கைத்தோற்கட்டும் (கையுறையும்) விரற்புட்டிலும் (விரலுறையும்) அணிந்து, தோள்களில் வாகுவலயம் பூண்டு, காதுகளிற் குண்டலங்களைத் தூக்கி, மார்பில் முத்தாரமணிந்தான். நீலவானத்திலே செக்கர்மேகத்திடையே வெண்பிறை விளங்கல்போலக் கருநிறமுகத்திலே செந்நிறக்கடைவாயில் வெண்ணிறக் கோரப்பல் விளங்கியது. திசையானைகளின் நெற்றிப்பட்டம்போல, வீரபட்டிகை விளங்கத் தரித்தான். மாதர் புலவிதீர்த்தற்கு வணங்குதலன்றி வேறெதற்கும் வணங்காத தலைகளிலே சூரியனினும் பேரொளியுடைய இரத்தினகிரீடங்களைச் சூடினான். திரிலோகங்களையுஞ் செயித்ததற்காகத் தேவர்கள் சூட்டிய வாகைமாலையோடு (இப்போது போர்க்குப்போதற்கு அடையாளமாகத்) தும்பைமாலையணிந்து கடல்மீன்களையும் ககனத்துமீன்களை*யும் கணக்கிட்டாலும் கணக்கிடமுடியாத கணைகள்நிரம்பிய அம்பறாத்தூணிகளைத் தோள்களிற் பூட்டினான்.

## இரதவருணனை

இவ்வாறு போர்க்கோலம்பூண்ட இராவணன், 'தேர்வருக' எனக் கட்டளையிட்டபோது, மூன்றுலகத்தோரும் ஒருங்கேயேறினாலும் இலேசான பூப்போல எளிதாகத் தாங்கவல்லதும், குதிரைகளில்லையானாலும் இராவணன் எண்ணிய இடத்துக்கு எய்துவதுமான தேர் வந்தது. அந்தத் தேர்க்குதிரைகள்சில, பாற்கடல் கடையப்பட்டபோது அமுதத்தோடு பிறந்தவை; சில சூரிய

---

* ககனம் - ஆகாயம். மீன் - நட்சத்திரம்.

னுடைய பச்சைக்குதிரைவமிசவழிவந்தவை; சில கடல்நீர் மீருது மடுக்கும் வடவையென்னும் பெண்குதிரைவயிற்றிலே வாயுதேவ னுக்குப் பிறந்தவை. அந்தக் குதிரைகள், மண்ணிலும் விண்ணி லும் நீரிலும் நெருப்பிலும் இமைக்குமுன் செல்லவல்லன. அந்தத் தேர், எட்டுத்திக்கிலுமுள்ள யானைகளின் கழுத்துமணிகள்போல ஒலிக்கின்ற ஆயிரகோடியென்னுந் தொகையினையுடைய கண்டா மணிகளையுடையது; மேருமலைமீது சூரியமண்டலங்களைக் குவித் தாற்போல, இரத்தினங்கள் இழைக்கப்பெற்றது; அளவற்ற ஆயு தங்கள் நிறைந்தது; என்றும் அழியாதது; வெற்றிக்கிருப்பிட மானது.

## இராவணன் இரதமேறுதல்

இராவணன் அந்தத் தேருக்கு அருச்சனைசெய்து அளவற்ற அந்தணர்க்கு அரும்பொருள் அளித்து அந்தத் தேரைத் தொழுது அதன்மேலேறியமர்ந்தான். அதுகண்ட தேவர்கள், தியங்கி மயங் கித் திகைத்தார்கள். ஐம்புலன்களையுமடக்கிய அருந்தவரும் அஞ்சி னார்கள்.

## இராவணன்சபதம்

'ஒன்று, சீதை, வயிற்றிலறைந்துகொண்டு, துன்பக்கடலுள் முழுகுதல்; மற்றொன்று, அந்தச்செயலை மண்டோதரிசெய்தல்; இந்த இரண்டிலொன்று இன்று நிகழ்வித்துத்தீர்வேன்' என்று இரா வணன் சபதஞ்செய்து, மண்ணும் விண்ணும் பிளக்க, சூரியசந்திரர் நிலைகுலையத் தோள்கொட்டி ஆரவாரித்து, வெற்பினம்* வெடிக்க, வில்நாணெறிந்தான்.

## இராவணன் போர்க்களம்புகுதல்

நாகரத்தினங்கள் விளங்கும் பலதலைகளையுடைய ஆதிசேடன் பூமியைச் சுமத்தலைவிட்டுப் பூமிமீது தோன்றினாற்போல, இரத்தின கசிதமான கிரீடமணிந்த பலதலைகளையுடைய இராவணன், போர்க் களத்திலே தோன்றினான். தேவர் அசுரருள்பட மூன்றுலகத் துள்ளோரெல்லோரும், 'இராவணன்கண்களிலே வடவாமுகாக் கினிக்கிருமடங்கு கோபத்தீ கொழுந்துவிட்டெரியப் போர்செய்யப்

* வெற்பு - மலை. இனம் - கூட்டம்.

புறப்பட்டுவிட்டான்; நமக்கு முடிவுகாலம் வந்துவிட்டது' என்று அஞ்சி உயிரைக் கக்குவார்போல, இரத்தங்கக்குவாரானுர். கருங்கடற்கூட்டமும் கரிய மலைக்கூட்டமும் கார்மேகக்கூட்டமும்போலக் கரிய இராக்கதசேனைத்திரள்கள் வருவதைச் சுக்கிரீவன் முதலியோர் கண்டனர். 'இராவணன் சேனையோடு புறப்பட்டுவந்தான். சேனையின் முன்னணி முந்திவிட்டது. நம் சேனை நடுங்குகின்றது.' என்று விபீடணன் இராமனிடம் கூறினுன்.

இராவணன் தேரேறுபடலம் முற்றிற்று

---

## இராமன் தேரேறுபடலம்

இராவணனுடன் பொருமாறு, இந்திரன் அனுப்பிய இரதத்தில் இராமனேறியதைக் கூறுவது:

### இராமன் போர்க்கோலம்பூணல்

இராவணன் வருகையையறிந்த வானரர், கூப்பிய கையினராய்க் குழறிய வாயினராய், நடுங்கின உடம்பினராய், அச்சக்குரலெடுத்து அபயமிட, முன், 'பாற்கடலிற் பள்ளிகொண்டிருக்கையில் இராவணுதியரால் துன்புற்ற தேவர்கள் கூக்குரலிட்டனராக, அதனைச் செவியேற்று அவர்களுடைய துயரையொழிக்கத் திருமால் தசரத சக்கரவர்த்திக்குப் புதல்வனுகத் தோன்றுதற்கு எழுந்ததுபோலவே, தேவாமிசமான வானரரின் பூசலைக்கேட்டு அவர்கள் துயர்தீர இராவணவதஞ்செய்யும்படி ஸ்ரீராமன் எழுந்தனன்'.* எழுந்தவன், 'சீதைதுயருக்கும் தேவர்துயருக்கும் இன்று முடிவு' என்று கூறி வலப்புறத்தில் வாட்படையைக் கட்டி, மெய்யிற் கவசமணிந்து, கையிற் கையுறையும் விரலுறையும் தரித்து, முதுகில் அம்பறுத் தூணியைச் சேர்த்துக் கட்டினுன்.

### இராமனுக்கு இந்திரன் தேரனுப்புதல்

அப்போது, சிவபெருமான், தேவர்களைநோக்கி, 'இன்ருேடு போர்முடிந்திடும். இராமனே வெற்றியடைவான். நீங்கள் இனி அச்சமடையவேண்டியதில்லை. தைரியமாக இராமனுக்குத் தேரனுப்புங்கள்' என்று கூறினுன். தேவர்கள், 'அது செய்யத்தக்கதே'

---

* வை. மு. கோ.

யென, இந்திரன் 'ஆம்' என்றுகூறி 'மூன்றுலகங்களிலுமுள்ள தேர்களுள் முதன்மையுடைய என்தேரை ஒருகணத்திற்குள் அலங்காரஞ்செய்து (ஏனைய இயங்காத கோவில்கள்போலல்லாமல் இயங்கும்) கோவிலாக இராமனுக்கு ஆக்குவேன்' என்று கூற, இந்திர சாரதியான மாதலியென்பான், (நகராத) பூமி நகருந்தன்மையுற்றாற் போல்கின்ற பிரமாண்டமான இந்திரரதத்தைக் கொண்டுவந்தான்.

## இந்திரரதவருணனை

அது, உச்சி வானத்திலும் பாதம் பூமியிலும் படிய மலைபோல் நின்றது; ஐம்பெரும்பூதங்களின் ஆற்றலுற்றது; பூமியின்வலிமை படைத்த சக்கரங்களும், வருடம் அயனம் இருது வாரம் நாள்களை ஒப்புமையாகவுடைய தட்டுக்களும் உடையது; மேகமண்டலம் கொடிச்சீலைபோலப்பெற்றது; நட்சத்திரமண்டலத்தை ரத்தின மாலையாகக்கொண்டது; ஊழிக்காலத்துக் கடல்பொங்கும் ஓசை போன்ற ஓசையுடையது.

## இந்திரரதம் இராமனிடம் வரல்

அந்தத் தேரைத் தேவர்கள் மலர்தூவி அருச்சித்து வணங்கி, 'எங்களுக்கு உதவிசெய்து வெற்றிதருவாயாக'வென்று வேண்டினார்கள். மாதலி, அந்தத் தேரினைச் செலுத்தி, இராமனிடம் கொண்டுவந்துசேர்த்தான்.

## இந்திரரதத்தை இராமன் வியத்தல்

இராமன், அந்தத் தேரைக் கண்டு, 'இது ஒற்றைச்சக்கரமுடையதல்லாததாதலால், சூரியன்தேரன்று; இப்போது உலக முடிவுகாலமாயில்லாததனால், பேரொளியுடைய இது உகாந்த காலத்துத்தோன்றுகின்ற ஊழித்தீயின் ஒளியுமன்று; நிலையில்லாமற் சஞ்சரித்தலால் மேருமலையுமன்று; இது திரிமூர்த்திகளின் விமானந்தானோ!'* என்று வியந்துகூறினான்.

---

* அலரிதனி யாழிபுனை தேரிதெனி லன்றால்
உலகின்முடி விற்பெரிய வூழொளியி தன்றால்
நிலைகொணெடு மேருகிரி யன்றுநெடி தம்மா!
தலைவரொரு மூவர்தனி மானமிது தானோ!

அலரி தனியாழி புனை தேர் - சூரியனுடைய ஒற்றைச்சக்கரம் பூண்ட தேர். மானம் - விமானம்.

அந்தத் தேரின்வரலாற்றை மாதலி தெரிவித்தல்

இராமன், மாதலியைநோக்கி, 'இந்தத் தேரை யாருடைய ஆணையின்படி என்னிடம் கொண்டுவந்தாய்?' என வினவ, அசுவ விருதயமறிந்த அவன், 'இது இந்திரன்தேர்; பல அண்டங்களைத் தன்மீது அடுக்கிக்கொண்டு பெயரவல்லது. அண்டங்களைத் தன்னகத்தே அடக்குந்தன்மையையுடையதாயிருத்தலால், திருமாலை ஒக்கும்; உனது சரம்போல அதிவேகமாகப் போகவல்லது. இதன்கடுமை, காற்றின்கடுமை கண்ணின்கடுமையன்றிக் கருத்தின் கடுமையையும் கடந்தது. தேவரும் முனிவரும் சிவனும் பிரமனும் விரும்பியவாறு, இந்திரனால் அனுப்பப்பட்டது' என்று விடையளித்தான்.

இது இராக்கதர்மாயத்தாலான தேரோவென ஐயுற்ற இராமனைத் தேர்க்குதிரைகள் தெளிவித்தல்

இராமன், அந்தத் தேர் அரக்கர்மாயத்தாலானதோவென ஐயுற, அதன் குதிரைகள், மாதலிவார்த்தை வாய்மையானதென வேதவாக்கால் மெய்ப்பித்தன. இராமன், ஐயம்நீங்கினனாயினும், அனுமானையும் இலக்குமணனையும் நோக்கி, 'உங்கள்கருத்து யாதோ?' என, அவர்கள், 'இது இந்திரன்தேரே' என்றனர்.

இராமன் இரதமேறுதல்

தீவினை, (சாம்பி) விழுந்து புரள்கின்ற மண்ணோடு (மண்ணுக) வாடவும், நல்வினை, மகிழ்ச்சிகொண்டு துள்ளவும், தேவரும் முனிவருமாகியவர்கை ஓங்கித் தலைமேலேறவும் இராமன் இனிதாக இரதத்தில் ஏறினன்.*

இராமன் தேரேறுபடலம் முற்றிற்று

---

* விழுந்துபுரள் தீவினை நிலத்தொடு வெதும்பத்
தொழுந்தகைய நல்வினை களிப்பினொடு துள்ள
அழுந்துதுய ரத்தமா ரந்தணர்கை முந்துற்
றெழுந்துதலை யேறஇனி தேறினனிராமன்.

தகைய - தன்மையுடைய. 'அழுந்துதுயரத்தமா ரந்தணர்கை முந்துற்றெழுந்துதலையேற' என்பதற்குத் 'துயரத்தழுந்திய தேவர்முனிவர்பக்கம் முன்னேறியோங்கித் தலைமைமிகவும்' எனவும் பொருள்கூறலாம். துயரத்து அழுந்து - துன்பத்தில் அழுந்தின. அந்தணர் - முனிவர். கை - பக்கம் - கட்சி. முந்துற்று - முன்னேறி. தலை ஏற - தலைமை மிக.

# இராவணன்வதைப்படலம்

இராமன் இராவணனைக் கொன்றதைக் கூறுவது

(இராமாயணப்போர்களில் முதலாகவுள்ள போர் தாடகை வதப்போராகவும் முடிவாகவுள்ள போர் இராவணவதப்போராகவும் இருப்பது குறிக்கத்தக்கது.)

## இமையவர் வாழ்த்தாநிற்க, இராமனேறிய தேர் செல்லுதல்

இராமன் இந்திரரதத்திலேறினவுடனே, தேவர்கள் வாழ்த்தி, அதற்குத் திருமாலின்வாகனமான கருடனை உவமைகூறாமல், அந்தத் திருமாலின் அவதாரமான இராமனுக்கு வாகனமாய்த் தங்கள் பகைவரையழித்தற்குதவிய அநுமானே சமமாமென்று நன்றியுணர்ச்சியோடுகூறி, அவன்தோள்மேல் மலர்தூவித் துதித்து வாழ்த்தினார்கள். பின்பு, அவர்கள், 'எங்களெல்லோருடைய வலிமைகளெல்லாம் இந்தத் தேருக்காகுக; இராமன் வெல்வானாகுக; அரக்கர் அழிவாராகுக; அரக்கிமார் அழுவாராகுக' என்று ஆரவாரித்தார்கள்; சக்கரங்கள் பூமியிலழுந்தியெழும்பத் தேர் செல்லலாயிற்று.

## தன் தேரை இராமனுக்கெதிரே செலுத்தும்படி இராவணன் கட்டளையிடல்

அந்தத் தேரை நேராகக் கண்ணுற்கண்ட இராவணன், ('இது வரை அஞ்சி யொடுங்கி யடங்கிக்கிடந்த) தேவர், (இன்று இராமன் வெல்வானென்ற துணிவினால், அச்சம் நீங்கி, அந்த) இராமனுக்குத் தேரளித்திருக்கின்றார்கள்' என்று கொதித்துக் கோபித்து வாய்மடித்து வண்டுறுக்கி நெறுநெறெனப் பல்லைக்கடித்து 'இராமனை வென்றபின் இவர்களைத் தண்டிப்பேன்' என்று தன்னுள்ளே கூறிக்கொண்டு, 'இராமனுக்கெதிரே தேரைச்செலுத்துக' என்று சாரதிக்குக் கட்டளையிட்டான்.

## அஞ்சியோடிய வானரர் அமர்க்களத்துக்குத் திரும்புதல்

பயந்தோடிப்போன வானரர், 'தேவர்கள் தேரனுப்பியிருக்கிறார்கள். இனி இராமன் வெல்வானென்பதிற் சந்தேகமில்லை'

யென்று சொல்லிக்கொண்டு, அச்சம் நீங்கி, அமர்க்களத்துக்குத் திரும்பிவந்து, மலைகளையும் மரங்களையும் எதிரிகள்மே லெறிவாராயினர். முரசினொலியும் வீரரின் ஆரவாரமும் சதுரங்கசேனைகளின் சஞ்சாரவோசையும் தேர்கள் புடைபெயரும் சத்தமும் கேட்டோர், செவிடுபட்டுப் பயந்து கீழே விழுந்து உயிரொடுங்கினார்கள்.

### இராம மாதலியர் சம்வாதம்

இராமன், மாதலியைநோக்கி, 'இப்போது தேரைச் செலுத்தாதிருப்பாயாக. பகைவன் செருக்கிச்செய்யக்கூடிய மிகுதிச்செயல்களெல்லாஞ்செய்தபின், நான் தூண்டும்போது செலுத்துவாயாக' என்றான். மாதலி, 'வள்ளலே! உன்கருத்தும் குதிரையினுள்ளமும் பகைவர்மனமும் காலநிலைமையும் காரியசாதனையும் தெரியேனாயின், என்சாரத்தியத்தொழிற்குரிய வித்தையைத் தெரிந்தேனாவேனோ?' என்றுகூற, இராமன் திருப்தியடைந்தான்.

### மகோதரன், தான் தனித்துப்பொருதற்கு இராவணனனுமதியை வேண்டிப் பெறல்

மகோதரன், இராவணனையணுகி, 'நீயும் இராமனும் போர்புரியும்போது, நான் உபயோகமற்றவனாய் உங்கள் போர்க்காட்சியைக் கண்டுகொண்டு வெறுமனே நிற்றல் குற்றம். யானும் போர்புரிதற்கு அனுமதியளிப்பாயாக' என, அவன் 'யானையைச் சிங்கம் கொல்லுதல்போல, நான் இராமனைக் கொல்வேன். நீ அவன் தம்பியோடு சண்டைசெய்து, அவன் தமயனுக்கு உதவிக்குவாராமல் தடுப்பாயானால், எனக்கு வெற்றியைத் தந்தாயாவாய்' என, 'அது செய்வே'னென்று மகோதரன் போனான்.

### மகோதரன் இராமனோடுபொருது இறத்தல்

போனவன், இலக்குமணனின்றவிடத்தையடையுமுன், இராமன்தேர் வரக்கண்டு, அவனுக்கெதிரே தேரைச்செலுத்தும்படி சாரதிக்குக் கட்டளையிட்டான். சாரதி, எண்ணிறந்தகோடி இராவணர் இராமனை யெதிர்ப்பாரானால், அவர்களெல்லாரும் போர்க்களத்திற் செத்துக்கிடப்பாரேயன்றித் திரும்பிச்செல்லார். ஆதலால், நீ இராமனை யெதிராதுசெல்வதே தக்கசெயலாம்' என்றான்.

மகோதரன், சினந்து, வாய்மடித்து, வண்டுறுக்கிக்கொண்டு 'அடா, நீயிவ்வாறு கூறியதற்கு உன்னைக் கொன்றிடுவேன். பாகனைக் கொல்லல் பழியென்று கொல்லாதுவிட்டேன்' என்று கூறிக்கொண்டிருக்கும்போது, இராமன்தேர் எதிரேவந்தது. போர்தொடங்கியது. மகோதரனுடைய தேர்ப்படைக்கடல், யானைப்படைக்கடல், குதிரைப்படைக்கடல், காலாட்படைக்கடல்களெல்லாம் இராமபாண வடவாக்கினியால் வற்றியொழிந்தன. ஒற்றைத்தேரே மிச்சமாக, அதிலே, அவன், தனியனாய், இராமனை யெதிர்த்தான். எதிர்த்து, இந்திரரதத்தின்மேலும், அதன்மேல் நாட்டிய இந்திரதுவசமான இடிக்கொடிமேலும், இந்திரசாரதியான மாதலிமேலும், இராமன்மேலும் அளவற்ற அம்புமழைபொழிந்து வீரகர்ச்சனைசெய்தான். இராமன் புன்னகைபுரிந்து, அவனுடைய வில்லுக்கொன்றும் கவசத்துக்கொன்றும் கைக்கொன்றும் தோளுக்கொன்றும் கழுத்துக்கொன்றுமாகக் கணைகளெய்து அவைகளெல்லாம் அறுபட்டுச் சிதறச்செய்தான். மகோதரன் சொல்லிவந்த சொல்லொன்றும் செய்கைவேறொன்றுமாக (இராமனைக் கொல்வேனென்ற சொல்லுக்கு மாறாக அவன் கொல்லப்பட்டானென்றபடி) இறந்தான்.

## இராமன் இராவணன்சேனையை அழித்தல்

மகோதரன் இறந்ததைக் கண்ட இராவணன், கோபாவேசனாய்த் 'தேரைச் செலுத்து, செலுத்து' என்றுசொல்லப், பாகன் விரையவிடுக்கத் தேர் செல்லலாயிற்று. இவன் (இராவணன்) சேனைமுழுதுமடிந்தாலன்றி அடங்கமாட்டானென்று இராமன் தன்விற்றொழிற்றிறமையினால், அவன் (இராவணன்) கண்டுகொள்ளமுடியாதபடி விரைவாக அவன் சேனைமுழுதையும் நாசமுறச்செய்தான்.

## இராவணனுக்குத் தீநிமித்தங்கள் தோன்றுதல்

இராவணனுக்கு இடப்புயங்கள் துடிக்கலுற்றன. வாயும் நாவும் வறண்டன. அண்டங்கள் அழுந்துவனபோலவும், கடல்கள்

வற்றுவனபோலவும், மலைகள் நடுங்குவனபோலவும், உலகமுழுதி லும் இரத்தமழைபொழிவதுபோலவும், மலைகள் பிதிரும்படி இடிகள் இடிப்பனபோலவும், சூரியன் ஒளிகெடும்படி பரிவேடத்தாற் சூழப்பட்டதுபோலவும், குதிரைகள் நடுங்கிக் கண்ணீர்விடுவன போலவும், வில்நாணற்றதுபோலவும், பூமாலை புலால்நாற்றமுடையனபோலவும் தோன்றின.* அவனுடைய தேர்க்கொடிச்சீலையில் சித்திரித்திருந்த வீணையின்மேல் காகங்களும் கழுகுகளும் மொய்த்தன.

## இராவணனும் இராமனும் எதிர்த்தல்

இராவணன், தோன்றிய துன்னிமித்தங்களை இலட்சியஞ் செய்யாமல், 'மனிதனான இராமன் என்னை வெல்லமாட்டுவானோ?

---

* இந்தத் துன்னிமித்த அடுக்கு, சொன்னயமும் பொருள்நயமும் தொனிநயமும் ஒருங்கமைந்த பின்வரும் கலிங்கத்துப்பாணித் தாழிசைகளை நினைவுறுத்துகின்றது:—

மதக்கரி மருப்பிற மதம்புலரு மாலோ;
மடப்பிடி மருப்பெழ மதம்பொழியு மாலோ;
கதிர்ச்சுடர் விளக்கொளி சுறுத்தெரியு மாலோ;
காலமுகில் செங்குருதி காலவரு மாலோ.

கரி - யானை. மருப்பு - கொம்பு. இற - ஒடிய. புலரும் - உலரும். முகில் - மேகம். குருதி - இரத்தம். கால - கக்க.

வார்முர சிருந்துவறி தேயதிரு மாலோ;
வந்திரவி விந்திரவில் வானிவிடு மாலோ;
ஓர்மனையி லூமனெழ ஓரியழு மாலோ;
ஓமவெரி யீமவெரி போலெரியு மாலோ.

வறிதே - (கொட்டுதலாகிய) காரணமில்லாமல். ஊமன் - கூகை. ஓரி - நரி. ஈமம் - சுடுகாடு.

பூவிரியு மாலைகள் புலால்கமழு மாலோ;
பொன்செய்மணி மாலையொளி போயொழியு மாலோ;
ஓவிய மெலாமுடல் வியர்ப்பவரு மாலோ;
ஊறுபுனல் செங்குருதி நாறவரு மாலோ.

புலால் - மாமிசம். ஓவியம் - சித்திரம். குருதி - இரத்தம்.

(ஒருகாலும் மாட்டான்)' என்று எண்ணினன். கருமமும் ஞானமும் போலவும், அவித்தையும் வித்தையும்போலவும், அதருமமும் தருமமும்போலவும் இராவணனும் இராமனும் ஒருவரையொருவர் எதிர்த்தார்கள். அன்றியும், அவர்கள், ஆதிசேடனும் கருடனும், இரவும் பகலும், இரணியனும் நரசிங்கமும், எதிர்ந்தாற்போலவும் எதிர்ந்தார்கள்.

## இராமராவணரின் சங்கங்கள் குதிரைகள் கொடிகள் வில்நாண்களின் செயல்கள்

இராவணன் தன்சங்கத்தை ஊத, மாதலி, தன் இந்திரசங்கத்தையெடுத்து ஊதி எதிர்முழக்கஞ்செய்தான். இராவணன், இராமன்மேல் அம்புகளெய்தான். அந்த அம்புகள் அவன்மேல் வீழ்கையில் 'இந்த அருமந்த திருமேனியில் கொடியராவணசரம் படுகின்றதே' என்ற குறிப்போடு வானநாடியர் இராமன் திருமேனியைக் கண்டனர்.'* இராமராவணர் தேர்க்குதிரைகள், அவ்விருவரையும்போலப் பகைகொண்டனவாய் ஒன்றையொன்று தின்றுவிடுவனபோலச் சினந்துநோக்கின. இருவர் தேர்க்கொடிகளும் பேரோசையுண்டாம்படி ஒன்றோடொன்று மோதிக்கொண்டன. இராவணன்வில்லொலி, சத்தசமுத்திரவோசையையொத்தது. இராமன்வில்லொலி, ஊழிக்காலத்துச் சத்தமேகத்தொனியையொத்தது.

## இருவர் வில்லொலியும் கேட்ட வானரர் வானவர் நிலைமைகள்

இருவர் வில்லொலிகளையும்கேட்ட அனுமனுதி வானரர், பதறிவிழுந்து ஏக்கமுற்று நினைப்பிழந்து செயல்மறந்தவராயினர். தேவர்கள், திடுக்கிட்டு, 'இப்போர் எவ்வாறாய்முடியுமோ? யார் வெல்வரோ?' என்று எண்ணுதற்கும் சக்தியற்றவராய், ஏக்கமுற்றவராய்ப் போவதும் வருவதும் பதைப்பதுமாகி, யாதுசெய்தோமென்ற ஞாபகமில்லாராயினர்.

## இருவர் விற்காட்சி வருணனை

இராமன்வில்லும், (வளைக்க வல்லாரில்லாமையைச் சொல்வானேன்,) தொட்டுத் தூக்கவல்லாரேயில்லாத இராவணன்வில்லும்—

---

* வை. மு. கோ.

(எதிர்த்த க்ரிய இருவரும் எதிர்த்திசைகளிலுள்ள இருகருமேகங்க் ளாக, இயற்கையாக ஒருகாலத்தில் ஒரே வானவில் தோன்றுதற்கு மாறாக) இரண்டு வானவிற்கள் (ஏககாலத்தில்) எதிரெதிராகத் தோன்றினாற்போன்றன.*

இராவணன்வீரகர்ச்சனை வில்லொலியிரண்டின் வருணனை

(இராமராவணயுத்தம் நிகழ்ந்த அக்காலத்தில்) இராவணன் வீரஆரவாரமும் வில்லொலியும் (எப்படியிருந்தன தெரியுமா? இப்படியே) இருந்தனவென்று (உரத்துக்) கூறுவனபோல, இன் றைக்கும் கடல்கள் ஒலிக்கின்றன, மேகங்கள் இடிக்கின்றன. (கட லொலி வீரஆரவாரத்துக்கும் இடியொலி வில்லொலிக்கும் உவமை) இச்செயல்கள் முடிவில்லாதன(வாய் என்றும் நிகழ்வனவாம்.)†

---

* நீண்ட மின்னொடு வானிடு நீண்டவிற்
பூண்டி ரண்டெதிர் நின்றன போன்றன
ஆண்ட வில்லிதன் வில்லும் அரக்கன்றன்
தீண்ட வல்லவ ரில்லாச் சிலையுமே.

முதலடிப்பொருள், மிகுந்த ஒளியோடு மேகத்திலே தோன்றுகின்ற நீண்ட (வான)வில். ஆண்ட வில்லி - (அன்பரை) ஆட்கொண்ட வில்லாளி யான இராமன். சிலை - வில்.

† அரக்கன் அன்றெடுத் தார்க்கின்ற ஆர்ப்புமப்
பொருப்பு மெய்விற் றெழிப்புமுண் டென்பபோல்
குரைக்கும் வேலையும் மேகக் குழாங்களும்
இரைத் திடிக்கின்ற இன்னும்ஓர் ஈறிலா.

ஆர்ப்பு - ஆரவாரம். பொருப்பு மெய் வில் - மலைபோலக் காத்திர முடைய (பெரிய) வில். தெழிப்பு - முழக்கம். என்ப - என்று கூறுபவை. குரைக்கும் - ஒலிக்கும். வேலை - கடல். குழாம் - கூட்டம். இரைத்து - ஒலித்து. ஈறு இலா - (கடல் ஒலித்தலும் மேகம் இடித்தலும், இராவண கர்ச்சனையும் கோதண்டத்தொனியும் இப்படியிருந்தனவென்று என்றும் காட்டுவனவாய்) முடிவில்லாதவை.

## இராவணன் இராமனை யெளிதாக வெல்வேனென்று தனக்குத்தானே கூறுதல்

இந்தச்சிறுமையுடையவ(ன் வில்லினுற் கொல்லத்தக்க தகுதியுடையவனல்லன். இவ)னை வில்லாற்கொல்லாமல் இவனிருக்கும் தேவரதத்தோடு சேர்த்துப்பற்றி ஆகாயத்திற் சுழற்றிப் பூமியின் மேல் மோதுவே'னென்று குரலெடுத்துக் கூறினுன் இராவணன். பின்பு, 'அம்புகொண்டுதாக்காமல் (கைப்பிடியாகப்பிடித்து) இவன் தோளை ஒடித்துச் சிறையாகப்பிடிப்பே'னென்றுன்.

## இராவணன் அம்புவிடுத்தலும் இராமன் தடுத்தலும்

இராவணன், கோபங்கொண்டு, வில்லைவளைத்து, இடியொப்பனவும் எமனுடையமார்பூடுருவுவனவும் மந்தரமலையைச்சுற்றின வாசுகிப்பெரும்பாம்புபோல்வனவுமான பாணங்களை எய்தான். அவைகள் மேருவைத் துளைத்து இடையே தங்காது அப்புறஞ் சென்று அண்டத்தையுந் துளைக்குமோவென்று அமரர்கள் ஐயுறலானுர்கள். அந்த அம்புகளை இடையே அற்றுப்போம்படி இராமன் தன்னம்புகளையெய்து தடுத்தான். வலியானெருவன் முயன்ற காரியம் தீவினைப்பயனுல் இடையூறுற்றுச் சிதைந்தாற்போலத்தன் அம்புகள் குறித்த குறியையடையாமல் இடையே வலிமைகெட்டொழியக்கண்ட இராவணன், கடைக்காலத்து மேகங்கள் மழை பொழிந்தாற்போல, அம்புமாரி பொழிந்தான். 'அந்த அம்புமாரி விண்ணை மறைத்தது; கடல்களைமறைத்தது; போர்காணும் தேவர் கண்ணை மறைத்தது; (அம்புகள் எத்தனையெனக் கணக்கிடாதபடி) கலைவல்லார்கருத்தை மறைத்தது; இராவணனுடைய விற்போர்த் தொழிற்றிறமை இருந்தவாறென்னே!' யென்றுகூறி, எரியை இருள்மறைத்தாற்போலத் (தனது தீயேயான சிவந்த திருமேனி மீது இருள்போல இருண்டகரியநிறமுடைய) யானைத்தோல் போர்த்த சிவபெருமான், திகைப்புற்றுன். ஏனைய பிரமேந்திராதி பெருந்தேவர்கள் பீதியடைந்தார்கள். எல்லாரும் அந்த அம்பு மாரியைப் பார்க்கப் பயந்தவராய்க் கைகொண்டு கண்பொத்தியிருந்தார்கள். வானரசைனியம், ஆயிரம் இடிவிழுந்த மலைபோலச் சின்னபின்னமானது. இவையெல்லாம் நிகழக்கண்ட இராமன், அந்த இராவணபாணங்களை விலக்க விரும்பினுன்.

## இருவரும் ஒருசமமாகப் பொருதல்

நொடியொன்றிலே நூறுயிரங்கணைகள் விடுத்தான் கொடியோன். நெடியோன் அவைகளைப் பலகூறாக அறுத்தான். அந்த அம்புக்கூறுகள், செங்கனல்சிந்திக் கடல்நீரைக்குடித்துச் சேறாக்கிப் பின்பு (சேற்றுநீரை உறிஞ்சித்) துகளாக்கக் கடல்கள், திடர்களாயின. வில்லினாலே அம்புகளையெய்த இராமனுக்கெதிராக, எழு, மழு, வளை, தண்டு, தோமரம், இருப்புலக்கை, சக்கரம், சூலமாகிய படைக்கலங்களை யெடுத்தெறிந்தான் இராவணன். இராமன், காற்று கனல் இடியாகிய இவைகளின் தன்மைகளையுடைய கணைகளைத் தொடுத்துவிடுத்தான். அவைகளில் ஒன்று பட வேலாயிரங்களும், மற்றொன்று பட மழுவாயிரங்களும், வேறொன்று பட எழுவாயிரங்களும், பின்னுமொன்று படத் தண்டாயிரங்களும், இன்னுமொன்று பட ஏனைய ஆயுதவகைகளாயிரங்களும் கண்டதுண்டங்களாயின. இவ்வாறு இருவரும் ஒருவரையொருவர் மிஞ்சாமல் ஒத்துப்போர்செய்தசமயத்தில், இராவணன், (தன்மீது இராமபாணந்தைத்தலால்) கொடிய நெடிய குத்துக்கோல்களாற் குத்தப்பட்ட யானைபோல வருந்தமுற்றுக் கோபித்து, ('இதுவரை எதிரியின் ஒருவில்லுக்கெதிராக ஒருவில்லைக்கொண்டு பொருததனால் ஒத்தபோராயிருந்தது. இனி, என்போர் நிரம்ப மிஞ்சிய போராம்படி செய்வே'னென்று) பத்துக்கைகளாற் பத்துவிற்களைப்பிடித்து மற்றைப் பத்துக்கைகளால் கணைகளைத்தொடுப்பானாகிப் பல மேகங்கள் ஒருங்குகூடிப் பெருமாரிபொழிந்தாற்போலச் சரமாரி சொரிந்தான்.

## இருவர் இரதவிரைவு வருணனை

(இன்னும் எதிரியை மிஞ்சுதற்கு, அவன் மண்ணில்நின்று பொர, நான் விண்ணினின்றுபொருவேனென்று இராவணன் எண்ணியதற்கிசைவாக) அவன் தேர், அமுதங்கடைதற்காகக் கருடனால் விண்வழியாகக் கொண்டுவரப்பட்ட மந்தரமலைபோலவும், ஆகாயமார்க்கமாக அனுமான் கொணர்ந்த சஞ்சீவிமலைபோலவும், வானவழி செல்லவல்ல முப்புரம்போலவும் ஆகாயத்திலெழுந்துசென்றது. அங்கிருந்து, அவன் எய்த அம்புகளால்,

வானரசேனை, உண்டோ இல்லையோவென்னும்படி, இராமன்கண்ணெதிரே கொன்று குறைக்கப்பட்டது. இராமன் 'நம் படைஞர் மாண்டனர். அவர்களை மாய்த்த இராவணனுடைய இருபது தோள்களோடு பத்துத்தலைகளையும் அற்றுவிழச்செய்வேன். தேரை விண்ணிற்செலுத்து' என்று மாதலியிடம் சொன்னான். அவன் அவ்வாறு செய்தான்.

சந்திரமண்டலத்துக்குமேலாகச் சூரியமண்டலஞ்சென்றாற்போல் இராவணன் தேரினும் உயரமாக, அதனினும் ஒளிமிகுந்த இராமன்தேர் சென்றது. இருதேர்களும் சாரிசென்ற விசையினால், மேகங்கள் திக்குகளிலெல்லாம் சிதறியோடின; நட்சத்திரங்கள் உதிர்ந்தன; மலைச்சிகரங்கள் தகர்ந்தன. அத்தேர்கள், இடம் வரும், வலம்வரும், விண்ணிலேறும், மண்ணில் இறங்கும்; அவைகளின் விசையினால், அவையிரண்டையும் நன்கு பகுத்தறிந்த தேவர்களும், இது இராமன்தேர், இது இராவணன் தேரென்று தெரியமாட்டாராயினர். இருதேர்களின் சாரிகைவிசையால், உதிராத விண்மீன்க ளில்லை; பிதிராத மலைகளில்லை; பிளவாத திசைகளில்லை. தேவர்கள், இராமராவணர் தம் தேர்களுடனே மேலே போர்செய்யும்போது இந்திரலோகத்தை அடைந்தாரென்பர்; சந்திரலோகத்தை அடைந்தாரென்பர்; சத்தியலோகத்தை அடைந்தாரென்பர். அண்டச்சுவர்களெல்லையாக அதற்குட்பட்ட ஏழு லோகங்கள், ஏழுதீவுகள், ஏழுகடல்கள், ஏழுமலைகள் ஆகிய இடங்களிலெல்லாம் அந்தத் தேர்கள் திரிந்தன.

## எய்படை எறிபடைப் பிரயோகங்களும் இரதங்கள் இலங்கைக்குத் திரும்பலும்

இராவணன் எடுத்துவீசிய படைகள் மழைத்துளிகள்போல எண்ணிறந்தனவாயிருந்தன. அவனெறிந்த படைக்கலங்களும் எய்த அம்புகளும் எங்கும் தங்காது சென்று உலகங்களையெல்லாம் அழிக்கலுற்றவைகளை அழித்திடாதபடி அறுத்துத் தடுத்தான் இராமன். மேலுலகங்களிலும் கீழுலகங்களிலும் ஊழிக்காற்றுப் போன்று விரைந்துதிரிந்த இரண்டு தேர்களும், திரும்பி இலங்கையை அடைந்தன. இருவர் தேர்க்குதிரைகளும் எண்ணிறந்த உலகங்களெல்லாம் விரைந்துதிரிந்தும் இளைப்படைந்தில.

## இராவணன் போர்த்திறம்

இராமனிருந்த இந்திரரதத்தில் உயர்ந்துவிளங்கிய இடிக் கொடியை இராவணன் அர்த்தசந்திரபாணத்தால் அறுத்துத் தள்ளினன். அது முழங்கிக்கொண்டு கடலில்விழ, பழுக்கக் காய்ச்சிய பருத்த இரும்புக்கட்டியைத் தோய்த்ததண்ணீர்போலக் கடல்நீர் வற்றியது. பின்பு, இராவணன், இராமன்தேரிற்பூட்டிய குதிரைத்தொகுதியைத் தாக்கும்படி அம்புத்தொகுதியைப் பிரயோகித்து, மாதலியின்மார்பிலே பன்னிரண்டுபாணங்களை அழுந்துமாறு செலுத்தினன். அந்தச்செயல், இராமனுக்கு, இலக்குமணன்மார்பூடுருவிய இராவணன் வேல்செய்த மனவருத்தத்தினும் மிக்க மனவருத்தத்தை விளைத்தது. பின்பு, இராவணன், தன் வில்லை, இந்திர தனுசு (வானவில்) போலவும் பிறைச்சந்திரன்போலவும் தோன்றும்படி வளைத்து, எண்ணிறந்த கொடுங்கணைகளை பெய்து இராமனுடம்புமுழுதும் மூடும்படி செய்தான்.

## இராமன் மறைந்ததனுல் நிகழ்ந்தவை

இராமன் தோற்ருனுக, இமையவர்கள், அவன் தோற்ருனுகக்* கருதி, அச்சமுற்றுர்கள்; அரக்கர் ஆரவாரித்தனர்; காற்று அசைவற்றது; அக்கினி ஒளிமழுங்கியது; கடல் அலையற்றது; சந்திரசூரியர் சஞ்சரியாது தம்பித்துநின்றனர்; மேரு குலுங்கியது; அண்டம் கலங்கியது. இலக்குமணனும் சுக்கிரீவனும் ஏனைய தலைவரும் தியங்கினுர்கள்; வானரவீரர்கள் மயங்கினுர்கள்.

## இராமன் தன்னைமறைத்த அம்புகளை அறுத்து அந்த அம்புகளைச் செலுத்திய விற்களையும் அறுத்தல்

இராமன், தன்னை மறைத்த அம்புகளையெல்லாம் தன் அம்புகளால் அறுத்தொழித்ததன்றி, இராவணன் நொந்து வருந்தச் செய்தான். இராமன்பக்கத்தாரெல்லாரும் தேறுதலுற்றுர்கள். பின்பு, இராமன், இராவணனுடைய விற்களையெல்லாம் இடையிலே துண்டுபடும்படி அம்புகளை விடுத்தான்.

* தோற்ருன் - தோற்ருதவன்; தோற்றவன்.

## இடிக்கொடிநின்ற இடத்திற் கருடக்கொடி யுறுதலும் வீணைக்கொடி யறுதலும்

இராவணன், இந்திரரதத்தில் இந்திரன்கொடியான இடிக்கொடியை வீழ்த்தியதனுல் வருந்திய இமையவர் வருத்தம் நீங்க(த் திருமாலின்கொடி)க் கருடன்வந்து கொடியாய்நின்றுன். இராமன், இராவணன்கவசத்தையூடுருவி இரத்தத்தைக் குடிக்கும்படி அம்புகளைச் செலுத்தினுன்; மேற்கொண்டு கணைதொடுத்து, இராவணனுடைய வீணைக்கொடியைத் தரையில் வீழ்த்தினுன். கருடக்கொடியேறியதையும் வீணைக்கொடி வீழ்ந்ததையும் ஒருசேர நினைந்து, தேவர்கள் தமக்கு ஆகவேண்டியகாரியம் நிறைவேறிவிடுமென்று களித்தார்கள்.

## இராவணன் எய்த தாமதாத்திரத்தை இராமன் சிவாத்திரத்தினுல் தொலைத்தல்

தான் இதன்முன் ஏவிய படைகள் இராமனை வருந்தச்செய்யாமையைநினைந்து, இராவணன், இந்த அம்பு துன்பம்விளைக்குமென்றெண்ணித் தாமதாத்திரத்தை விடுத்தான். அந்தத் தாமதாத்திரத்தில் தோன்றிய அம்புகளில்,-சில, நெருப்புக்கக்கும் முகமுடையவை; சில, இரத்தந்தோய்ந்த முகமுடையவை; சில, தேவமுகமுடையவை; சில, பேய்முகமுடையவை; சில, பாம்புகள் போன்றவை. அந்த அம்புகள், ஒருதிசையில் இருளும் மற்றொரு திசையில் வெயிலும் பரவச்செய்வன; ஒருதிசையிற் சுழற்காற்றும் மற்றொருதிசையில் மழையும் உண்டாகச்செய்வன; அந்த அம்புகள் தம்மை ஏவினவன் எண்ணியவற்றையெல்லாம் இயற்றுபவைகள். அவைகள் மேற்கூறிய தம்செயல்களைச் செய்யக்கண்டு, அமரர்கள் கதறினர்.

இராவணன் ஏவிய தாமதாத்திரத்துக்கெதிராக, இராமன் சிவாத்திரத்தை விடுத்தான். விடவே, நனவுற்றபோது கனவிற் கண்டபொருள்களோடு கனவுந் தொலைந்துபோதல்போலத் தாமதாத்திரம், தான்செய்த செயல்களோடு தானும் தொலைந்தொழிந்து போனது.

## இராமராவணர் எதிரெதிர் பலவகையம்புகள் விடுதல்

தன் தாமதாத்திரம், இராமன் சிவாத்திரத்தினால், மெய்யை எதிர்ந்த பொய்போல, அழியக்கண்ட இராவணன் கோபித்துக் கொடியகணைகளை விடுத்து, இராமன்மேலழுந்தச்செய்து, ஆரவாரித்தான். பின்பு, தேவர்கள்புகழை வாரியுண்டதும், எண்ணிறந்த இனிய உயிர்களால் எமன்வயிற்றை நிரப்பியதும் இந்திரனைத் திடுக்கிடச்செய்ததுமான ஆசுராத்திரத்தை இராமன்மேலேவினான். அது, ஒருநொடிப்பொழுதில் உலகத்தாரையெல்லாம் உண்டிடுமென்று பயந்து வருந்திய வானவர் மகிழ்ந்து ஆரவாரஞ்செய்ய, அதை ஆக்கிநேயாத்திரத்தினால் இராமன் அறுத்தான். உடனே எமனொடுங்கினாலும் ஒடுங்காதனவும், மேருவைத் தூளாக்குவனவும், காற்றினுங் கடுமையுடையனவுமான நூறுகோடியம்புகளை இராவணன் எய்தான். அதுகண்ட முனிவர் சிலர், 'என்ன கைவிசையோ!' என்றனர்; சிலர், 'இவை அம்பல்ல, மாயமே!' என்றனர்; சிலர், 'இந்த அம்புகட்கு உலகிடம் போதியதோ!' என்றனர்; சிலர், ('இதன்முன் இராவணன் எத்தனையோ போர்கள்செய்ததைக் கண்டிருக்கின்றோம். அவன்) இதன்முன் எந்தப்போரையும் இவ்வளவு முயன்றுசெய்ததில்லை!' என்றனர்.* ஆகாயத்தை மறைத்த அந்த அம்புகள் அடிப்பாகந்தொட்டு நுனிப்பாகம்வரை பிளப்பாகும்படி இராமன் அர்த்தசந்திர பாணங்களைப் பிரயோகித்தான். பிரமதேவன்படைத்த இந்த உலகத்திலே செய்தற்கரிய தவத்தைச்செய்து பயன்படைத்தவர் யாவரினும் பெரும்பயன் படைத்தவனான இராவணன், பலபோர்களிலும் உபயோகித்த பெருமையுடைய படைக்கலங்களைத் தொடுத்துவிடுவேனென்று கருதித் (தன் மனைவி மண்டோதரியின்தந்தையான) மயன்படைக்கலத்தை இராமன்மேல் விடுத்தான். விட்ட அந்தப் படைக்கலம்,

---

* என்ன கைக்கடுப் போவென்பர் சிலர்; சிலர் இவையும்
அன்ன மாயமே, அம்பல வென்பர்; அவ் வம்புக்
கின்ன முண்டுகொ விடமென்பர் சிலர்; சிலர் இகற்போர்
முன்ன மித்தனை முயன்றில னுமென்பர் முனிவர்.

கடுப்பு - வேகம். 'இவையும்' என்பதில் உம்மை இசைநிறை. அன்ன - போல்வன, 'மாயமே அன்ன' என மாறுக. இகல் - வலிமை.

உலகைச் சுட்டுவிடுமென்று தேவர்கள் திடுக்கிட்டுச் சோர்ந்தார்கள்; கெட்டோமென்று வானரத்தலைவர் வாடினார்கள். அந்த மயன் படைக்கலத்தை இராமன் காந்தர்வாத்திரத்தினால் அழித்தான். பின்பு, முன்காலத்தில் பிரமதேவனால் படைக்கப்பட்டதும் இரணியன் இந்த உலகத்தாரை அடிமைப்படுத்துதற்கு உதவியதும் மதுவென்னும் அசுரன் உபயோகித்ததுமான தண்டு என்னிடம் உண்டு. அதைக்கொண்டு இவனுயிரை உண்டுவிடுவேனென்று இராவணன் தண்டாயுதத்தை இராமன்மேலெறிந்தான். இவன், நூறு உண்டைகளுடையதும் தாமரைமொட்டையொத்த முகமுடையதுமான பாணத்தை விடுத்து, அந்தத் தெய்வத்தன்மையுடைய க்தாயுதத்தை, அது முன்னமே நொறுக்கப்பட்டிருந்ததோவென்றெண்ணும்படி, தூள்களாக உதிரச்செய்தான்.

## இராவணன் மாயாத்திரமெய்தல்

'இவன், யான் இதுவரையும் எய்த அற்பத்தன்மையான அம்புகளை அழித்துத் தன் விற்றொழிற்றிறத்தைக் காட்டினான்; இனி, இவன் இறந்துபடும்படி பெரும்படைவிடுவேன்' என்று இராவணன் எண்ணி, மாயாத்திரத்தையெடுத்து, அதற்குப் பூசைபுரிந்து, தன்வழிபடுகடவுளாகிய சிவபெருமானை வணங்கிச் செபத்தியானஞ் செய்து, அந்த மாயாத்திரத்தைத் தன்வில்லிற்றொடுத்து விடுத்தான்.

## இறந்துபோன இராக்கதரெல்லாம் அந்த மாயாத்திரத்தால் உயிர்பெற்றார்போலுதல்

இராமலக்குமணர் அம்புபட்டிறந்த இராக்கதர்களெல்லாரும், உயிர்பெற்றார்போன்று, ஆகாயமளாவநின்று ஆரவாரிப்பாராயினர். இறந்த இந்திரசித்தும் அவன் தம்பியரும் பெரும்படைத்தலைவரும் மற்றைத்தலைவரும் மகோதரன் முதலிய மந்திரிமாரும் பிறரும் ஆரவாரித்தார்கள். கும்பகருணனும் மற்றைய பிரமுகர்களும் எழுந்தார்கள். மூலபலமுழுவதும் இறந்த ஏனைய சேனைகளும் தேர்கள் யானைகள் குதிரைகள் முதலியனவும் எழுந்தன. (இந்த இலங்கைச் சேனைகளல்லாத பலதிக்குகளினின்றும் பாதாளத்தினின்றும்

வந்து இராவணனுக்காக இறந்த) ஆயிரம் பெருவெள்ளஞ்சேனையும் எழுந்தது. இராவணன் சிவபெருமானிடம் பெற்ற வரத்தினால் அவனுடைய இறந்துபோன சேனைகளெல்லாம் உயிர்பெற்றன வென்று எட்டுத்திசைகளிலுமுள்ள எல்லாரும் எண்ணினார்கள்.

உயிர்பெற்றெழுந்தனபோன்ற அந்தச் சேனைகள், 'நாங்கள் வெல்லப்பட் (டுக் கொல்லப்பட்) டேம் போன்றோம்; (உண்மையில்) யாங்கள் இறப்பதுண்டோ? இல்லை' என்று சொல்லித் தனித் தனி தங்கள் தங்களைக் கொன்ற வெற்றியாளர்பெயர்களைக்கூறி அழைத்து, அறைகூவி, (மேற்கூறியவாறு 'நாங்கள் செத்திட வில்லையென்ற உண்மையை) இன்று மெய்ப்பித்துக் காட்டுகிறோம். வாருங்கள், (எங்களுடன் போர்செய்ய) வாருங்கள்' என்று கூறிக் கொண்டு, தேவரும் முனிவரும் (அஞ்சிச்) சிதறியோடும்படி, எங் குஞ்சென்றன.*

செத்தவர் பிழைத்தார்போற் செய்த அந்த மாயாத்திரத்தி னால், இவைகளுக்குப் பூமியிடம்போதாது, ஆகாயமே தங்குதற் குரியதென்னும்படி, மலைகள்போலப் பெரிய உடல்கள் படைத்த பூதங்களும் பேய்களும் பிறந்தன. இறந்து பிறகு உயிர்பெற்றவர் போன்றவரான மேற்கூறிய இராக்கதர்தொகைக்கு இரட்டிப்புத் தொகைகொண்டவரும், சந்திரனைப் பிளவுகள்செய்தாலொத்த கோரப்பல்லினரும், மாயவித்தைவல்லவருமான அசுரர்கள், அந்த அத்திரத்தினால் தோன்றி, எங்கும் நெருங்கி நிறைந்தார்கள். அந்த அத்திரத்தினால் தோன்றிய அனைவரும், விசித்திரமாகப் பலபல படைக்கலந்தாங்கிநின்றார்கள்.

---

* சென்ற எங்கணும், தேவரும் முனிவருஞ் சிந்த;
'வென்றதெங்களைப் போலும்; யாம் விளிவதும் உளதே?;
இன்று காட்டுதும், எய்துமின் எய்துமின்' என்னக்
கொன்ற கொற்றவர் தம்பெயர் குறித்தறை கூவி.

விளிவது - சாவது. உளதே - இல்லை. எ, எதிர்மறை. எய்துமின் - வாருங்கள். என்ன - என்று. கொற்றவன் - வெற்றியாளன். அறைகூவுதல் - போருக்கழைத்தல்.

## இஃது என்னை? யென இராமன்வினவ மாதலி கூறுதல்

இராமன், இந்தக்காட்சியைக்கண்டு, மாதலியைநோக்கி, 'இந்த நிகழ்ச்சி, மாயத்தாலானதா? விதியின்விளைவா? அரக்கர்பெற்ற வரத்தினாலானதா? இவையாதுமல்லாத வேறுகாரணத்தாலான தா? என்பதை நீ ஆலோசித்தறியவல்லையானால் சொல்லுவாயாக' என, அவன் சொல்லுகின்றான். 'இராவணன், உன்னிடம் இந்த அம்பை,

> இருப்புக் கம்மியற் கிழைநுழை யூசியொன் றியற்றி
> விருப்பிற் கோடியால் விலைக்கெனும் பதடியின் விட்டான்.*

(எல்லா மாயங்களுக்குங் காரணமான மாயைக்கே கர்த்தா வாய் மாயனெனப்பேர்பெற்ற உன்னிடமே மாயாத்திரத்தை விடுத்த பயனற்ற பைத்தியச்செயல், அரிய பெரிய சிறிய இரும்புச் சாமான்களனைத்தையும் செய்யவல்ல கொல்லனிடத்தில், அற்ப மான ஊசியை விற்கமுயலும் அறிவிலி செயல்போலுமென்றவாறு)

எல்லாத்துன்பங்களும் அவற்றுக்குக் காரணமான வினைகளும் உன்திருநாமத்தை (ராமமந்திரத்தை)ச் செபித்தார்க்கு நீங்கச் செய்வோனே; பாம்புவிடத்தைப் பரிகரிக்கும் மந்திரம்போல, மாயையை மாய்க்கும் உன் அம்பினால், உன்னைநினைப்பவர் பிறப் பொழிதல்போல, இந்த மாயாத்திரம் ஒழியும்படிசெய்வாயாக' என்று மாதலி கூறினன்.

## ஞானத்திரம்விடுதலும் மாயாத்திரமழிதலும்

இராமன், 'இந்த நிகழ்ச்சிகள், இராவணனுடைய வரத்தினா லானவையாயினுமாகுக, மாயையினாலானவையாயினுமாகுக, பலத்தி னாலானவையாயினுமாகுக, உண்மையினாலாயினதாயினுமாகுக, எதனாலானதாயினும் இதனைப்போக்குவாயாக' என்றுகூறி, ஞானத் திரத்தை விடுத்தான், அறநெறியன்றிப் பிறநெறியிற் செல்ல விடாத மெய்யறிவினால் பிறப்புக்களும் அவற்றுக்குக் காரணமான

---

* இருப்புக்கம்மியன் - கொல்லன், இழை - நூல், கோடி - கொள்ளு வாய். ஆல், அசை. பதடி - பதர் - உள்ளீடு (ஆன அரிசி) இல்லாத நெல்; அறிவிலியென்றபொருள் குறித்தது.

மாயையும் ஒழிதல்போல, ஞானத்திரத்தினல், (செத்த அரக்கர் உயிர்பெற்றார்போலுதல், இல்லாத அசுரர் உள்ளவர்போலுதல் முதலிய பொய்த்தோற்றங்களோடு அத்தோற்றங்களுக்குக் காரணமான) மாயாத்திரம் தொலைந்தது.

## இராவணன் சூலம்விடுதலும் அது இராமன் உங்காரத்தால் ஒழிதலும்

இராவணன், தனக்கெதிராகக் காணப்படுவனவெல்லாவற்றையும் அழிக்கும்படிகருதிச் சூலாயுதத்தைக் கையிற்கொண்டான். தன்னில் (சூலத்தில்) தொங்கவிடப்பட்ட ஆயிரங்கண்டாமணிகள் பேரொலிசெய்யப்பெற்றதாய்த் தேவர்கள் கண்டு துன்புற்று (இது யாது செய்துதீருமோவென்று) அஞ்சுவதாய், எதிரிகளுடைய வலிமையை யெரித்தொழிப்பதாய், உடனே விசைத்து விடப்படும் நிலையினதாயிருந்த அந்தச் சூலத்தை இராமன் கண்டான். அது மூன்றிலைகளும் (மூன்றுகவடுகளும்) எரியாநின்றது; அக்கினிதேவன் அஞ்சும்படி திரியாநின்றது; தேவர்கள் ஓடும்படியாகவும் (வானரவீரர் முதலிய வேனயர்)கூட்டங்களோடும்படியாகவும் எல்லாவுலகங்களிலும் பரவும்படி பேரொளிவிரியாநின்றது.

அந்தச் சூலத்தைச் 'செல்வாயாக'வென்று இராவணன் விடுத்தான். தேவர்கள், இராமனைநோக்கி, 'வள்ளலே! இதனைத் தொலைக்கும் வலியுடையார் வேறொருவருமில்லை. நீயே வல்லாய். இந்த எமன் போன்ற சூலத்தைத் தொலைப்பாயாக; உடனே தொலைப்பாயாக' என்று அபயமிட்டார்கள்.

இராமனை மறவாமல் இடைவிடாது தியானிக்கின்ற ஞானக் கண்படைத்த பரமபாகவதர்திறத்தில், அப்பெருமானை நினையாதார்செய்யும் சூழ்ச்சிகள் பயன்படாதொழிதல்போலக் காற்றுப்போலக் கடிதாகச்செல்வனவும் தம்வேகத்தால் இடியேறுகள் திடுக்கிடுகின்றனவுமான அந்தச்சூலத்தின்மேலெய்யப்பட்ட ராமபாணங்கள் (அதற்கு யாதோரூறும் செய்யமாட்டாதனவாய்) வீணாகப் போயின. அதன்மேல், இராமன் தன்னிடத்துள்ள தேவாத்திரங்

களையெல்லாம் எய்ய, அவை, பொய்யும் தாய் (பஞ்சின் நுனி)யும் போன்று அந்தச் சூலத்தைத் தாக்கி ஒன்றுஞ்செய்யமாட்டாதன வாயொழிந்தன.

இராமன், அந்தச் சூலம் முனிவர்சாபம்போல வலிமையுடைய தென்பதையறிந்து, செய்யத்தக்க தின்னதென்றுதெரியாதை, நின்றான். அவன் (செய்யக்கடவதான) செயலை மறந்தவனாய் அந்தச் சூலத்திற்கு எதிராகச் செய்யவேண்டியசெயல்களைச் செய்யாது கைவிட்டிருக்கின்றானென்று தேவர்கள் அச்சங்கொண்டார்கள். (மனிதனாகப்) பிறந்தான் (ஆகி இராமநாமம்பூண்ட திருமால், மனுடப்பிறவிக்குரிய) அறியாமையுடையவனாய்த் தருமதேவதை அஞ்சிக் கால்கள்நடுங்கும்படி (செயலற்று)நின்றான். (அவனல்லாத) பிறர் (எல்லாரும்) அஞ்சும்படி சூலம் வந்தது.* அந்தச்சூலாயுதம், கண்டாமணிகள் ஒலிக்க, நெருப்புச்சிந்திக் கொலைத்தொழிலை மேற்கொண்டதாய், இராமன்மார்பெதிராக ஓடிப்புகுந்தவுடனே, அவன் கொடுங்கோபங்கொண்டு உம்மென்றொலித்த உங்காரவொலியினால், பலநூறு பொடித்துண்டுகளாகிச் சிதறிபொழிந்தது. (இராமனுடைய உங்கரிப்பொலி, அவன் விடுத்த தேவாத்திரத் தொகுதியினும்எத்தனையோமடங்கு வலிமையுடையதென்றவாறு.)

## சூலம் தொலையக்கண்ட தேவர்செயலும் இராவணன்செயலும்

அதுகண்ட தேவர்கள், போனவுயிர் திரும்பிவரப்பெற்றார் போன்று, அச்சம்நீங்கி, ஆரவாரித்து, இராமன்மேல் பூமாரிபொழிந்தார்கள்; துள்ளினார்கள்; தொழுதார்கள். '(இதுவரைநேர்ந்த தீமைகளைத் தீர்த்த நீ) இனிவரும் தீமைகளையும் தீர்த்திடுவாய்' என்று கூறினார்கள்.

---

* 'மறந்தான் செய்கை, மற்றெதிர் செய்யும் வகையெல்லாம்
துறந்தா' னென்னு வும்பர் துணுக்கந் தொடர்வுற்றார்
அறந்தா னஞ்சிக் கால்குலை யத்தா னறியாதே
பிறந்தான் நின்றான், வந்தது சூலம், பிறரஞ்ச.

துறந்தான் - கைவிட்டான். துணுக்கம் - அச்சம்; நடுக்கம்.

தான் ஏவிய சூலம் இராமனிறந்தாலொழிய அவனைவிட்டுச் சும்மாபோகாதென்ற நம்பிக்கைகொண்டிருந்த இராவணன், இராமனுடைய உங்காரத்தால், அந்தச் சூலம் பொடிப்பொடியாய்ப் பிதிர்ந்து உதிர்ந்தொழிந்ததைக் கண்டு, இராமன் திண்ணமாக வென்றானென்றெண்ணி, (அச்சத்தால்) உள்ளம் வியர்த்தான். விபீடணன் (தன்னைவிட்டுப் பிரிந்துபோகுதற்கு) முன் (இராமன் பரம்பொருளென்று) சொன்னதை நினைவுகூர்ந்தான்.* 'உண்மையான வரங்களையெல்லாம் பயன்படாதபடி தொலைக்கின்ற இவன், (திரிமூர்த்திகளும் என்னை எதிர்க்கமாட்டாமல் வலியொடுங்கிக் கிடக்கின்றமையால், அம்மூவருள்ளே) சிவனாயிருக்கலாமோவென்றால், (அவன்) அல்லன்; பிரமனாயிருக்கலாமோவென்றால், (அவனும்) அல்லன்; திருமாலாயிருக்கலாமோவென்றால் (அவனும்) அல்லன்; (திரிமூர்த்திகளினும் பெரியரான) முனிவருளொருவனாயிருக்கலாமோவென்றால், (இவன் சடைமுடிதரித்து மரவுரியுடுத்துத் தவவேடம் பூண்டிருக்கின்றானேயன்றி, என்றும் தவஞ்செய்தவனல்லன். இனித்) தவத்தைச்செய்துமுடிக்குந் தரமுடையனல்லன். வேதமுதற்காரணனென்னும் பரம்பொருள், இவன் தானே!' என்றெண்ணினான் இராவணன்.† 'இவன் (மேற்கூறியவருள்

---

* வென்றா னென்றே யுள்ளம் வெயர்த்தான், விடுசூலம்
பொன்றா னென்னிற் போகல தென்னும் பொருள்கொண்டான்;
ஒன்றும் உங்கா ரத்தீ யுற்றே டுதல்காணா
நின்றா னந்நாள் வீடண னார்சொல் நினைவுற்றான்.

'என்றே' என்பதில் ஏகாரம் தேற்றம். பொன்றான் - சாவான். போகலது - போகாது. பொருள் - கொள்கை. 'பொய்யு மெய்யு மாமென்னும் பொருள்மேற் கொள்ளும் புன்னெறி'யார் (பெரியபு. நமிநந். 10.) தமிழகராதி. ஒன்று-மதிப்புக்குரியபொருள். 'ஒறுத்தாரை யொன்றாக வையாரே' (குறள், 155) தமிழகராதி.

† சிவனோ அல்லன்; நான்முக னல்லன்; திருமாலாம்
அவனோ அல்லன்; மெய்வர மெல்லாம் அடுகின்றான்;
தவனோ வென்னிற் செய்து முடிக்குந் தரமல்லன்.
இவனோ தானவ் வேத முதற்கா ரணன்! என்றான்.

அடுதல் - அழித்தல். முனிவர், மும்மூர்த்திகளிலும் எவ்வாறு பெருமையுடையவரென்பது, கம்பராமாயணசாரம் அயோத்தியாகாண்டம் 19-22-ஆம் பக்கங்களில் விரித்து விவரித்து விளக்கிக்கூறப்பட்டிருக்கிறது.

அல்லது அவரல்லாதாருள்) யாவனுயினுமாகுக. யான், என் ஒப்பற்ற ஆண்மைமீங்காதேனுய் இன்றே என் வெற்றி நிறைவேறச் செய்வேன். (பூரணசெயம்பெற்றுலன்றிப்) போர்க்களத்தினின்று திரும்பிப்போகேன்' என்று எண்ணினன்.*

இராவணன்விட்ட நிருதியத்திரத்தை இராமன் கருடாத்திரத்தினல் அழித்தல்

பின்பு, இராவணன், இரத்தம்போற் சிவந்தகண்கள் அக்கினி கக்க, உலகு குலேய, நிருதி (தென்மேற்குத் திக்குப்பாலகன்) அத்திரத்தை வில்லிற்ருெடுத்து விடுத்தான். ஆதிசேடனைப்போலப் படத் தலைகளுடையனவும், பல உடம்புகளும் வாய்களும் படைத்தனவும், மேருகிரியினும் மிக்க வலிபெற்றனவும், வாய்தோறும் கடல்போலும் விடவெள்ளம்பெருகுகின்றனவும், நெருப்புச்சொரியுங் கண்ணினவும், பேய்களின் வாய்கள்போல் வெள்ளிய கோரப்பற்கள் விளங்கவுற்ற வாயினவும், கண்டோர், 'இவை இராமனைக் கடித்தேதீரு' மென்றும் 'பூமியைக் கடல்களோடு உண்டுவிடு'மென்றும், எண்ணி நடுங்கச்செய்வனவுமான நாகங்கள், அந்த நிருதியத்திரத்தினின்றுந் தோன்றின. இராமன் அந்த நாகங்களைப் போர்க்களமெங்குங் கண்டு காருடாத்திரத்தை (கருடமுகக்கணையை) விடுத்தான்.

அந்தக் காருடாத்திரத்தினின்று காற்றுப்போல வேகமுடையனவும், பொன்னிறமான சிறகும் மூக்கும் நகங்களு முடையனவுமான கருடப்பறவைகள், மேற்கூறிய நாகங்கள் எங்கெங்கே எவ்வெவ்வாறு சென்றனவோ, அங்கங்கே அவ்வவ்வாருகச் செல்வனவாய் வானமுழுதும்நெருங்கிநிறைந்தன. அந்தக்கருடப்பறவைகள், வாய்களில் எரியும் நெருப்புடையனவாயிருந்ததனுல், அவைகள், இலங்கை முழுவதையும் கொளுத்திவிடுவோமென்று விளக்குக்களெடுத்தனபோன்றன. அவைகள், உச்சியிற் பூவுள்ள தாமரைத் தண்டுகள்போலத் தலையில் இரத்தினமுடைய நாகங்களைக் கால்நகங்களினுற்பற்றி, வாள்போன்ற மூக்குக்களால் அரிந்து தின்றன.

---

*யாரே னுந்தா னுகுக யானென் தனியாண்மை
பேரே னின்றே வென்றி முடிப்பென் பெயர்கில்லேன்

தனி - ஒப்பின்மை. பேர்தல் - பிரிதல் (தமிழகராதி.) வென்றி - வெற்றி. பெயர்தல் - இடமாறல்.

## இராமன்பாணங்கள் இராவணன்பாணங்களை வீழ்த்தி அவன்மார்புள்ளே புகுதல்

அப்போது, இராவணன், கோபம்மிகுந்து, கொதிக்கும்நெஞ்சும், தீப்பொறிசிதறும் பெருமூச்சும் உடையவனாகி, இடிபோன்ற கொடுந்தோற்றமுடைய அம்புகளை விண்ணும் மண்ணும் வெற்றிடமில்லாததாகும்படி எங்கும் தூவி நிறைத்தான். அந்த அம்புகளை இராமனெய்த அம்புகள் விசையாகத் தாக்கி வீழ்த்தினதோடு நில்லாமல் இராவணன்மார்புக்குட் புகுந்து மறைந்தன.

அப்போது, இதுவரை இராமனோடு உயர்வுதாழ்வின்றிச் சரிசமமாகப் போர்செய்த இராவணனுக்கு வலிமையும் வீரமும் குறைய, அவையிரண்டும் இராமனுக்கு மிகுவனவாயின.

## இராவணன் தலையை இராமன் அறுத்தல்

இதுவே ஏற்றசமயமென்று, இராமன், இராவணனுடைய பத்துத்தலைகளுட் பிரதானமான தலையை அர்த்தசந்திரபாணத்தால் அறுத்துத்தள்ளினான். (ஆதிசேடனுக்கும் வாயுதேவனுக்கும் நேர்ந்த போராட்டத்தில், ஆதிசேடன் தன் ஆயிரம்படங்களாலும் மேருவின் ஆயிரங் கொடுமுடிகளையும் பேர்க்கமுடியாதபடி அழுத்திப் பொத்திக்கொள்ள, அவற்றைப் பேர்த்தெறியும்படி தன் முழுவலிமையையுஞ் செலுத்தி) வாயுதேவன் விசைத்து வீசிய போரிலே, மேருவின் கொடுமுடி ஒடிந்து கடலில்வீழ்ந்தாற்போல, இராமசரம்பட, இராவணன்தலை கடலில் வீழ்ந்தது. அது கண்ட தேவர்கள் யாவரும் துள்ளிக்குதித்தார்கள்; தூசுவீசினார்கள்; ஆடினார்கள்; பாடினார்கள்; இராமனைப் பாராட்டினார்கள்; இறந்த உயிர்கள் கருமபலனாகத் திரும்பப்பிறத்தல்போல, அறுபட்ட இராவணன்தலை (அவன்செய்த தவப்பயனாக) திரும்ப முளைத்தது. தவவினைபோலச் சிறந்த பிறவினையுண்டோ? (முளைக்கும்போதே கோபக்குறியாக) வாய்மடித்துக்கொண்டுமுளைத்த அந்தத் தலை, கொடுங்கோபத்தோடு இடியிடித்தாற்போல அதட்டி இராமனைத் திட்டியது.

## இராவணன்கை அறுபடலும் முளைத்தலும்

இராவணன், தன் தலையையறுத்துத் தள்ளினனென்றகோபத்தால், இராமன்தோள்களிற் பதியும்படி பதினான்குபாணங்களை விடுத்தான். அறுக்கப்பட்ட தலை முளைக்குந்தவமுடையவனென்று தெரிந்து, இராமன், (திரும்பத் தலையறுத்தலைவிட்டு) இராவணனுடைய விற்பிடித்த கையை அறுத்துத் தரையில் விழுத்தினான். அற்றகை பற்றியிருந்த வில்லை மற்றொருகை பற்றியதுபோல, முளைத்தகை பிடித்துக்கொண்டதனால் வேறொருகை முளைத்ததென்பதை யாவரு மறியாராயினர்.

## அறுபட்ட கையாலும் தோமரத்தாலும் மாதலியை இராவணன் தாக்குதல்

இராவணன், அறுபட்டகையை எடுத்து மாதலிமேல் வீசினான். அது அவன்மார்பில் தாக்க, அவன், நிலைகுலைந்து, இரத்தங் கக்குவானானான். பெருமரத்தாற் றாக்குண்டாற்போலத் தன்கைத் தாக்கினால் வருந்திக்கொண்டிருந்த மாதலியை உயிரைத் தொலைக்கக்கருதி, அவன்மீது இராவணன் தோமரத்தையெறிந்தான். இன்றோடு மாதலியின் உயிர்வாழ்க்கை யொழிந்திட்டதென்று கண்டோர்கூறும்படி விரைவாக வெந்தழல்சிந்தி விரைவாகவந்த அந்தத் தோமரத்தை, இராமன், பஞ்சமுகாத்திரமென்ற ஐமுகக் கணையைவிடுத்துத் தூளாக்கினான்.

## இராவணன் தலைகளை இராமன் ஓய்வில்லாமல் அறுத்தல்

இராமன், இராவணனுடையதலைகள் ஒவ்வொன்றும் ஓய்வில்லாமல் நூறுமுறை முளைக்கவும், அவை யாவும் தூரப்போய் விழுந்து புரண்டிடும்படி (தலைக்கொருகணையாக) மிக்க துரிதமாக ஆயிரங்கணைகளெய்தான். நிலங்களிலும் கடல்களிலும் எல்லாத் திக்குக்களிலுமாகப் பார்த்த பார்த்த இடங்களெல்லாம் அறுபட்ட தலைகள், இடிகள்போலப் பேராரவாரஞ்செய்துகொண்டு வீழ்ந்தன. முன்பெல்லாம் இராவணன்தலைகளைக் கண்டமாத்திரத்தே வணங்கி வலம்வந்த பேய்கள், இப்போது அறுபட்ட அந்தத் தலைகளிலுள்ள கண்களைத் தோண்டுவனவாயின.

### இராமபாணங்கள் உடம்புமுழுதும் பாய்தலால் இராவணன் மூர்ச்சித்தல்

இராவணன், வாளும் வேலும் உலக்கையும் வச்சிரப்படையும் தண்டாயுதமும் மழுவும் இடிகள்போல இராமன்மேல்விழும்படி எறிந்தான். (அப்போது, இராமன், இவனை வெல்லும் உபாயம் யாதெனயோசனைசெய்து, இராவணன்மார்பிலும் தோள்களிலும் கண்களிலும் நாவுகளிலும் கணைகளெய்து அவனுடம்பை அம்பு நிறைந்த கூடென்னும்படிசெய்தான். அவன், உயிரொடுங்கும்படி இராமபாணங்கள் உடம்புமுழுதும் ஊடுருவியோடியதனால், பகைத் தலும் சீறுதலும் ஒழிந்து வலிமைமாறித் தளர்ச்சிதோன்ற, நிலை குலைந்து வருந்தினன்; இரத்தம் மிகுதியாக வடிய, அறிவுகலங்கி, மூர்ச்சித்துத் தேர்மீது கிடந்தான்.

### இராமன் போரைநிறுத்துதலும் இராவணன் மூர்ச்சைதெளிதலும்

அதுகண்டு, தேவர்கள், ஆரவாரஞ்செய்து மேலெழும்பிக் குதித் துக் கூத்தாடினர்கள். இராவணன் அறிவுசோர்ந்தானென்று சாரதி தேரை அவ்விடத்தினின்றும் பின்னாகத் திருப்பிக்கொண்டு போனான். இராவணன் மூர்ச்சித்தவுடனே, இராமன் அம்பெய்தலை நிறுத்திவிட்டான். அப்போது மாதலி இராமனைநோக்கி 'இவன் மூர்ச்சைதெளிந்தால், எதுவும் செய்வதரியதாய்விடும். இப்போதே கொன்றிடுக' என்றான். இராமன், 'ஆயுதங்களைக் கையகலவிட்டு அறிவுசோர்ந்திருப்பவனைக் கொல்லுதல் போர்முறை (யுத்த தருமம்) அன்று' என்றான். (அந்தச்சமயத்தில் போரைநிறுத்திய புண்ணியச்செயலைநினைந்து) இராக்கதரெல்லாரும் இராமனை அஞ் சலித்தார்கள். அப்போது, தேவர் அஞ்ச இராவணன் தேறினன்.*

### இராவணன், தன்தேரைத் திருப்பியதற்காகச் சாரதியைக் கோபித்தல்

உறங்கினவன் விழித்தாற்போல, மூர்ச்சைதெளிந்த இராவ ணன், தன்னெதிரே இராமனையும் அவன்தேரையும் காணாகிச் சாரதியைக் கோபித்துநோக்கி '(நம் பகைவராகிய) தேவர்கள் கண்

---

* இப்படலம் களசூ-ஆம் பாட்டின் இறுதியடி.

காண (அவர்கள் என்னைப் போரிற் புறங்காட்டியோடிய பேடியென் றிகழத்) தேரைத் திருப்பினாய். அதனால் வீரராகவன் (என்னைப் பரிகசித்துச்) சிரிக்கும்படிபண்ணினாய். பிழைசெய்தவனானாய். நான் உன்னைப் பெருஞ்செல்வனாக்கியதற்கு மாறாக, அஞ்சினே னென்று பகைவர் கருதும்படிசெய்தாய். இவ்வாறுசெய்த நீ, உயி ரோடு பிழைத்துப்போவாயோ' என்று கோபித்து, வாளையெடுத்து உயர்த்தியபோது, சாரதி, தன் தலையைத் தாழ்த்தி இராவணன் பாதங்களைப்பார்த்துக் 'கோபந்தணிவாயாக. என் எண்ணத்தை அருள்செய்து ஆராய்வாயாக. நீ பராக்கிரமச்செயல்கள் செய்த லொழிந்து, மூர்ச்சித்துக்கிடந்தாய். அப்போது, அங்கே, ஒரு கணப்பொழுது தங்கியிருந்தால், அந்தக்கணத்திற்குள்ளே உன் னுயிர் (எதிரியால்) மாள்வது நிச்சயமென்று தேரைத் திருப்பிக் கொண்டுவந்தேன். சாரதிசெய்யவேண்டிய கடமையைச் செய் தேன்' என்றுகூறி வணங்கினான்.

## இராவணன் தேரைத் திருப்பி இராமனை எதிர்ந்து பொருதல்

இராவணன், சாரதிசெய்தது சரியென்றெண்ணி, அருள் செய்து, 'தேரைத் திருப்பிச்செலுத்துக' எனச் சாரதி, அதுசெய் தான். தேர் இராமனெதிரேபோய்ச்சேர்ந்தது. இராவணன், கூற்றி னுங் கொடிய கணைகளைக் கோடிகோடியாகத் தூற்றினான்; (அப் போது, விடியப்போகுஞ்சமயத்தில் மிக்க இருளான குமரியிருட் டுத்தோன்றுதல்போலவும், அணையப்போகிற விளக்கொளி அதிக சுவாலையுடையதாதல்போலவும், மரணகாலம் சமீபித்த) தனக்கு இயற்கையாகவுள்ள வலிமை மும்மடங்காகப்பெற்றவனாகத் தோன் றினான்; வேறோரிராவணனோவென்று எண்ணும்படி மிக உக்கிர மாகப் போர்செய்தான். அதனைக் கண்டவர் யாவரும் அஞ்சி னார்.*

---

* கூற்றின் வெங்கணை கோடியின் கோடிகள்
தூற்றி னான்வலி மும்மடி தோற்றினான்
வேற்றோர் வாளரக் கன்னென வெம்மையால்
ஆற்றி னன்செருக் கண்டவ ரஞ்சினார்.

கூற்றின் வெம் கணை - எமனைக்காட்டிலும் கொடிய அம்பு. மும்மடி - மூன்றுமடங்கு. வாள் - கொடுமை. வெம்மை - கொடுமை; கடுமை. ஆற்றுதல் - செய்தல். செரு - போர்.

### இராவணன் எடுத்த எடுத்த விற்களையெல்லாம் இராமன் அறுத்தறுத்துத் தள்ளுதல்

"'புகையுண்டானால் நெருப்புண்டு' என்ற பழமொழிப்படி இவனுக்கு வில்லுண்டானால் வெற்றியுண்டு. இவன் வில்லைத் தொலைத்தி வெற்றியை யொழித்திடுவேன்" என்று இராமன் ஒரு கணையை விடுத்து இராவணன்வில்லை யிரண்டு துண்டுகளாக்கினான். இராவணன் மாறிமாறி வில்லை யெடுத்தவண்ணமாயிருந்தான். இராமன் ஆயிரக்கணக்கும் பதினாயிரக்கணக்குமான அந்தவிற்களைப் பொடிப் பொடியாக நொறுக்கிப் பலதிசைகளிலும் சிதறிப்போய்விழச்செய்தான்.

### இராவணன் எறிபடைகளை யெறிதலும் அவை இராமபாணங்களால் அறுதலும்

இராவணன், (எடுத்த வில்லெல்லாம் அறுக்கப்படுதலைக் கண்டு, விற்போர்செய்தலைவிட்டு,) இருப்புலக்கை, வேல், தண்டு, குத்துக்கோல், ஈட்டி, கப்பணம் ஆகிய ஆயுதங்களை இராமன்மார்பில் எறிந்தான். அவைகளை இராமன் அம்புகளாலறுத்துக் கடலில் விழுந்து திட்டுகள்போலாம்படி செய்தான்.

### இராமன் பிரமாத்திரம் எய்தல்

பின்பு, இராமன், 'இதுவரையெய்த எண்ணிறந்த அம்புகள், இவன் கண்மணியுள்பட உடல்முழுதும் புண்செய்தனவேயன்றி உயிரைப் போக்கவில்லை. இவனுயிரையொழித்தற்குச் செய்யத் தக்கது யாது?' என்று சிந்தித்துப் 'பிரமாத்திரத்தை இவன்மார்பில் எய்வேன்' என்று முடிவுசெய்தான். முடிவுசெய்தபடியே, அந்த அம்பையெடுத்து அருச்சனைசெய்து வில்நாணில் தொடுத்து, அந்த நாணை அது தோளைத்தொடுமளவும் இழுத்து, ஏழுமராமரங்களையும் வாலிமார்பையும் துளைத்த அந்த அம்பை இராவணன்மார்பைத் தாக்கும்படி எய்தான்.

### இராவணன் மார்புள்ளே பிரமாத்திரம் புகுதல்

அந்த அம்பு, நான்முகனுடைய மூலமந்திரஞ்செபித்து அபிமந்திரித்துவிடப்பட்டதனுல் நான்குமுகங்கள்கொண்டு, இதன் எதிரே உகாந்தகாலத்துச்சூரியனும் மின்மினிப்பூச்சியாமென்னும்படி மிளிரும் பேரொளியைச் சக்கரவாளகிரிக்கப்புறத்துள்ள பெரும்புறக்கடலினும் பரவும்படி வீசிச்சென்று, இராவணன்மார்புள்ளே புகுந்தது. அது புகுந்த அதிர்ச்சியினுல், பூமியும் வானமும் நிலைகுலைந்தன.]

### இராவணன் இறத்தல்

193 முக்கோடி வாணுளு முயன்றுடைய பெருந்தவமும்[1]
முதல்வன் முன்னுள்[2]
எக்கோடி யாராலும்[3] வெலப்படா[4] யெனக்கொடுத்த
வரமு மேனைத்[5]
திக்கோடு[6] முலகனைத்துஞ்[7] செருக்கடந்த புய[8]வலியும்
தின்று மார்பிற்
புக்கோடி யுயிர்பருகிப் புறம்போயிற் றிராகவன்றன்
புனித வாளி.

கொண்டுகூட்டு: இராகவன்றன் புனிதவாளி, முக்கோடிவாணுளும், முயன்றுடைய பெருந்தவமும், முன்னுள், முதல்வன் 'எக்கோடியாராலும் வெலப்படாய்' எனக் கொடுத்த வரமும், திக்கோடும் உலகனைத்தும் செருக்கடந்த புயவலியும் தின்று, மார்பின் ஓடிப்புக்கு, உயிர்பருகிப் புறம் போயிற்று.

பொருள்: இராமனெய்த பரிசுத்தமான அந்த அம்பு (பிரமாத்திரம்), இராவணனுடைய முக்கோடி ஆயுளையும் (அவன்) முயன்றுசெய்த பெருந்தவத்தையும் முன்காலத்திலே பிரமதேவன் எந்தக்கூட்டத்தாராலும் வெல்லப்படாயென்று (அவனுக்குக்) கொடுத்த வரத்தையும், (அவன்) எல்லாத்திக்குக்களிலும் (சென்று) உலகமுழுவதிலும் போர்செய்துவென்ற புயபலத்தையும் அழித்து, (அவனுடைய) மார்புள்ளே விரைந்துபுகுந்து, உயிர் (முழுவதையும்) குடித்து, (உடம்பைவிட்டு) வெளியேபோயிற்று.

மூன்றரைக்கோடி முக்கோடியெனச் சுருக்கிக்கூறப்பட்டது. 'அரை கடையிட்டமைவுற்ற முக்கோடி ஆயு' என இப்படலம் உசங-ஆம் பாட்டில் வருவது காண்க.

வாணுள் - வாழ்நாள் - ஆயுள். முதல்வன் - (சிருட்டி திதி (- காத்தல்) சங்காரமென்ற முத்தொழில்களில் முதற்றொழிலாகிய சிருட்டியைச்செய் பவனுன) பிரமன். கோடி - தொகுதி - கூட்டம் (தமிழகராதி). 'எனே', என்பது 'புயவலியும்' என்பதுகொண்டு முடிவதாய், 'இவையல்லாத' 'மற் றைய' என்ற பொருள்படநின்றது. செரு - போர். கடத்தல் - வெல்லுதல் (தமிழகராதி.) புக்கு - புகுந்து. புனிதம் - பரிசுத்தம். வாளி - அம்பு.

பாடபேதம்: [1] பெருவரமும். [2] முனிவர்தாமே, முதல்வர்தாமே, முனைவர்தாமே. [3] எவராலும். [4] வெலப்படாது, வெலப்பட்டான். [5] மேன்மை. [6] திக்கோடி. [7] எவ்வுலகுஞ். [8] பெரு.

[இராவணன் இறந்ததுகண்டு களித்து ஆரவாரிக்கின்ற தேவர் களும் முனிவர்களும் வாழ்த்துக்கூறி வாரியிறைக்கின்ற மலர்மாரி (மேல்விழுந்துகொண்டு) தொடராநிற்க, அந்த இராமபாணம், பாற் கடற்குச்சென்று, நீராடித் திரும்பி, இராவணனுடைய உடலி னின்றுபெருகிய இரத்தப்பெருங்கடன்மேலாகச்சென்று, இராம னம்பறாத்தூணியுள்ளே புகுந்து மறைந்தது.

[தொடரும்.]

---

# பிழைதிருத்தம்

செந்தமிழ், தொகுதி ஙகூ, பக்கம் கசஅ, வரி கO-ல் நிலமுறை என்றிருப்பதை நிலமுற எனத் திருத்திக்கொள்ளல்வேண்டும்.

---

உ

# ஆராய்ச்சியின் ஆராய்ச்சி

செந்தமிழ்ப்பத்திராசிரியரவர்கள் "வங்கெதிரேதொழுதானை" என்னும் கம்பர்பாட்டிற்கு விரித்தெழுதிய சிறப்புரையில் எனக்குச் சிறிது கருத்துவேறுபாடு தோற்றியது. வைணவருள் ஒருசிலரும், கடவுட்கொள்கையையும் அறமரபுகளையும் இகழும் பிறர்சிலரும் அப்பாட்டிற்கு ஆசிரியரவர்களுரையைத்தழுவிப் பொருள்கூற நான் முன் கேட்டதுண்டு. ஒருசாரார் சமயச்சார்பாலும் மற்றொரு சாரார் நடுநிலையில் தேர்ந்தெளியாமலும் கூறிய பொதுப்பொருள் எனக்கு உடன்பாடின்றெனினும், அதை மறுத்தெழுதவிரும்பாது விட்டிருந்தேன். ஆனால் நல்ல புலமையும் புகழுமுடைய செந்தமிழ்ப்பத்திராசிரியர் அப்புத்துரையைத் தமிழ்ச்சங்கச் "செந்தமிழில்" எழுதியதால், அதற்கோர் எதிருரையை அதே பத்திரிகையில் நான் வெளியிடநேர்ந்தது. அதற்கு அவர்கள் மறுமொழியும், மறுமொழிக்கு என் மறுப்புரையும் ஒன்றன்பின் ஒன்றாகச் "செந்தமிழில்" வந்துள.

இதற்கிடையே அப்பொருளை முன் எழுதிவெளியிட்ட வெள்ளகால் பண்ணையாரும், தமிழ்மூதாளருமான இராவ்சாஹிப். திரு. சுப்பிரமணியமுதலியாரவர்கள் நான் தம்முரையையும், தம்மையுமே தாக்கினதாக எண்ணி உளன் நொந்த உணர்வுடனே "செந்தமிழ்"த்தொகுதி ௩௮ பகுதி ௰௨-ல் ஒரு குறிப்பை வெளியிட்டார்கள். அவர்கள் ஐயமகற்றி, ஆற்றுவிக்கக்கருதி, அவர்கள்முன் வெளியிட்ட புத்துரையை நான் முன் அறியாமையும் அவர்களை அவமதித்து மனமுளைய எக்காலும் எனைத்தளவும் எண்ணவும் எழுதவும் நான் துணிகிலாமையும் தெரிவித்து, அப்பாட்டில் கம்பர்கூறக்கருதியபொருள்பற்றிச் சில குறிப்பும் "ஐயமகற்றல்" எனும் தலைப்பேரோடு "செந்தமிழில்" எழுதினேன். அதனாராய்ச்சியாக அவர்கள் கட்டுரையொன்றெழுதி அதில் தம் புத்துரையே சிறந்ததென வலியுறுத்தி இம்மாதம் வெளிவந்த "செந்தமிழ்"த்தொகுதி ௩௯ பகுதி ௩-ல் வெளியிட்டார்கள். நேற்று

அதனை நான் படித்து உளமகிழ்ந்தேன். வாதச்செய்யுட்பொருளளவில் என்கருத்தைக் கொள்ளாவிடினும், நோதக்க நீதுரைத்து அவர்களை நான் இகழ்ந்ததுபோல் முன்கொண்ட ஐயம் நீங்கி அமைதிகொண்டதாக அவர்கள் எழுதிய அன்புரையை விரைந்தேற்று வாழ்த்துகின்றேன்.

முப்பதாண்டுகளாக எப்போதும் எல்லாத்துறையிலும் முரணின்றி ஒருப்பட்ட நண்பர்களாயிருந்த பின்பு, தற்போது சிறியதொரு கருத்துவேறுபாட்டால் வயதொடுவளர்ந்து வளம்பட முதிர்ந்த முதுக்குறைவுடைய இப்பெரியாரொடு வாதப்போர் மேற்கொள்ள விரும்பகிலேன். அவர்களைப்போலவே உண்மைகாணும் வேட்கையும் கண்டது கரவாதுரைக்கும் பெற்றியும் எனக்குமியல்பாமென்பது அவர்கள் நன்கறிந்தது. ஆகலின் என்னைச் சிந்திக்கத்தூண்டிய அவர்கள் ஆராய்ச்சியுரையை அதற்குரிய மதிப்பும் கவனமும் தந்து நான் படித்தேன். அதில் எனக்குத்தோன்றிய ஒருசில குறிப்பை அவர்கள் விரிந்தநோக்கிற்கு விடுத்து, இனி இதுபற்றி என்னளவில் வாய்வாளாமை மேற்கொள்ளநினைக்கின்றேன்.

வாதப்பொருளான கம்பர்பாட்டுக்களுக்கு இரண்டுமுறை குகன் பரதனடிபணிய, பரதன் அவனை முதலில் எதிர்தொழுது பிறகு எடுத்துத் தழுவினன் என்பது பழையவுரை; இருமுறையும் பரதனே குகனடிவீழக் குகன் பரதனை ஒருமுறை தழுவினன் என்பது செந்தமிழாசிரியர் முந்திய புத்துரை; குகன் இருமுறையும், பரதன் ஒருமுறையும் ஒருவர்காலில் ஒருவர் வீழ்ந்து வணங்கினர் என்பது முடிவாகத் திரு. முதலியாரவர்கள் தெளிக்கும் புதியவுரை.

இவற்றுள், தம் புதியவுரை முன் எல்லாரும் கொண்டிருந்த "பழையவுரையிலும் சிறந்ததென்பதும், பாட்டின் சொற்கிடக்கைமுறைப்படி (தம்) புதியவுரை அதிக இயல்பானதென்பதும் என்னபிப்பிராயம்" என்று திரு. முதலியாரவர்கள் தமது ஆராய்ச்சிக்கட்டுரைத்தொடக்கத்தில் ஒருமுறை குறித்தார்கள். மீட்டும் அக்கட்டுரையிறுதியில் முன்னைய என் "மூன்று கட்டுரைகளையும் முழுக்கவனத்துடன் படித்தபின்பும் பழையவுரையினும் (தம்)

புதியவுரை அதிகப் பொருத்தமானதென் றுறுதியாகக் கருதுகின் றேன்" என்று வலியுறுத்துகிறார்கள். உண்மையிலே இஃ திவர்க ளுளங்கொண்ட கருத்தென்பதை எனைத்தளவும் ஐயமிலா தேற் கின்றேன். எனில், மூன்று வணக்கமுறையில் எது சிறந்ததென்பது பற்றி ஆராய்ச்சி நிகழவில்லை என்பதை நான் விநயமுடன் நினைவூட்ட விடையிரப்பேன். இப்பாட்டை ஆக்கிய கம்பர்கருத்து எதுவாகும்? என்ற ஒன்றே இங்கு ஆயும்பொருளாகும். ஆக்கியோர்நோக்கறிய அவர்கூறும்சொற்களே நற்றுணையாம். இஃதெங்கள் இருவருக்கும் உடன்பாடே. பிற்காலத் தொவ்வொருவரும் தத்தமக்குச் சிறந்த தெனத் தோன்றுவதைப் பழம்பாட்டிற் பெரும்புலவர்கருத்தாகக் கொண்டு அதற்கேற்ப உரைகாணமுயலுவதொன்று: தங்கருத்தால் நன்று தீது கருதாது, செய்யுட்சொற்றொடர்சுட்டும் செம்பொருள் கொண்டு ஆக்கியவர்குறிப்பறிந்து துணிவதொன்று. இவ்விரண் டில் பின்முறை என் பிறழாதகொள்கையாம். நின்றாங்கே நேருரை யால் பொருள்முடியாவிடத்துமட்டும் சொற்களுக்கு முதலியையும் செம்பொருளை நெகிழவிட்டுப் பின் அவற்றிற்கேற்கும் அயற் பொருட்டுணையாற் றுருவுவது புலத்துறையின்முறையாகும் உரையறமாம். அம்முறையும் புலன்முதிர்ந்த பெரியாருக் குடன்பா டென் றெண்ணுகிறேன். அம்முறையில் "பாட்டின்சொற் கிடக்கைமுறை"கொண் டவற்றின் செம்பொருளால் கம்பர்கருத் தறிவேமேல், பழையவுரையென்று இவர்கள்தரும்பொருளைத் தள்ளுதற்குப் போதிய நல்லேதெதுவும் இல்லையென எண்ணுகி றேன். அதனைமட்டும் அவர்களுக்கு இங்கெடுத்துரைக்க விடையுங் கொள்வேன்.

அதற்குமுன் நான் அவர்களுக்கு வற்புறுத்தவிரும்புவது ஒன் றிரண் டுண்டு. "கடவுட்கொள்கையை மடனெனப்பழித்து..... பழம்பாட்டுக்களில் தம் புதுக்கோள்புகுத்தும் கருத்தோடு இவ் வுரைகூறுவார்கூட்டத்தில்" முதலியாரவர்களை நான் சேர்த்தெண் ணுமையை என் முன்னுரையில் தெளிய விளக்கியபின்னும், நான் அவர்கள் "கருத்துவேறுபாட்டைத் தாக்குதலோடமையாமல், (என்) கருத்தினின்றும் வேறுபட்ட கருத்துடைய அவர்களையும்

தாக்கினேனென்பதில் இம்மியும் சந்தேகம் இருந்திராது'' என்றெழுதுகிறார்கள். அவர்கள் "கடவுட்கொள்கையை மடனென மறுத்து மகிழ்பவ''ராகாமையொன்றே அத்திறத்தார்வகுப்பில் அவர்கள் சேர்க்கப்படாமையைத் தெளிவாக்கும். அதன்மேலும் தாம் அதிற் சேர்க்கப்பட்டே இருப்பதான எண்ணம் இன்னும் இருப்பானேன்? "பரதன் குகன்காலில் விழுந்து வணங்கினன் என்பாரை'' நான் என் எதிருரையில் "இருபிரிவினராகப் பிரித்ததாயும்'' அவ்விருவருள் ஒருவரான வைணவர்வகுப்பில் தாம் வாராமையால், "அவசியமாக நான் சுட்டிய மற்றொருசாராரோடு சேர்க்கப்பட்டவர் ஆவதாயும்'' முடிவுகட்டுகிறார்கள். இப்பொருள்கூறுவார் நான் குறித்த இருசாரார்மட்டும் என நான் யாண்டும் கூறிலனே. நான் முன் எழுதியது இதுவாகும்:—"செந்தமிழாசிரியரவர்கள் குகன் காலில் பரதன்விழுந்தான்; விழுந்த வேந்தனை வேடன் வாரியெடுத்துத் தழுவினன் என்கிறார்கள். இது ஒருசில வைணவர் உவக்கும் கருத்தாகலாம். கடவுட்கொள்கையே மடனெனப்பழித்து, வரிசையும், தரமும், வாழ்க்கைவேற்றுமைகளும் அறவே யொழித்து மகிழும் மற்றொருசாரார் பழம்பாட்டுக்களில் தம் புதுக்கோள் புகுத்தும் கருத்தோடு இவ்வுரைகூறுவதும் உண்டு.'' இதில் இவ்வுரைகூறுவோர் இருவகுப்பினரே, பிறராகார்; என்ற குறிப்பெதுவுமில்லை. அன்றியும், வைணவர், கடவுட்கொள்கை மடனென்பார் எனும் இவ் விருவகுப்பாரெல்லாரும் இச்செய்யுட்பொருளிதுவெனக் கருதுபவர் என்றுகூட நான் கூறவில்லை. வைணவருள் ஒருசிலரும் கடவுட்கொள்கை மடனென்பார் ஒருசிலரும் இவ்வுரை கூறுவரென்பதுமட்டுமே என்கூற்றாகும். இவ் விருவகுப்பிலும் இவ்வுரைகொள்ளாதார் பலரிருக்கலாம். இவ் விருவகுப்பிற் சேராத வேறுசிலர் இப்பொருளை இப்பாட்டிற்குக் கூறலுங்கூடுமே. திரு. முதலியாரவர்கள் இவ்வுரைகூறியதால்மட்டும் இவ்விரண்டில் ஒரு வகுப்பில் சேர்க்கப்பட்டாகவேண்டிய அவசியத்தைக் காணுவானேன்? நான் எண்ணாததும், என் சொற்றொடருக்கு இன்றியமையாப்பொருளாகாததுமான கருத்தை என்பாலேற்றி அதனால் மனமுளைந்து நொந்து, அவர்கள் சிந்தையினுற் சுடப்பட்டுத் "தகைமாண்ட தக்கார்'' செற்றத்திற்காளாகும் குற்றமும் நான் சார்த்தப்பெற்றேன். இனி இதனை மறந்துவிட அவர்களை நான் மன்றாடி வேண்டுகிறேன்.

இனி திரு. முதலியாரவர்கள் என் "உரைக்கு மறுப்பை"ப் பத்திரிகைக்கனுப்பாமல் எனக்கெழுத நான் எதிர்பார்த்ததாய் எழுதுகிறார்கள். அவ்வாறு அவர்கள் எண்ணுதற்கு என் உரையிற் சிறிதளவும் இடமில்லையென்பதையும் விநயமுடன் அறிவிக்கிறேன். அவர்களை நான் "கடவுட்கொள்கை மடனென மறுத்து மகிழ்பவர்" வகுப்பிற் சேர்த்து எண்ணினேனோ என்று ஐயுறுவதாய் முன்னுரையிற் சுட்டினார்கள். நீண்ட பலவாண்டாகத் தொடர்ந்து வரும் "நட்பாங்கிழமைதருமுணர்வால்", அவர்கள்கொண்ட ஐயத்தை எனக்கு எழுதித் தெளியலாமே என்பதை நான் குறித்தேனல்லால், என் உரைமறுப்புவெளியீட்டை நான் வெறுத்தேனென்று அவர்களெண்ணியது வியப்பாகும். "செந்தமிழா"சிரியர் புதியவுரைக்கு எதிருரை நான் எழுதிவந்தேன் என்பது எனது உரைபடிப்பாரெவர்க்கும் விளக்கமாகும். நான் மறுத்த செந்தமிழாசிரியருரை திரு, முதலியாரவர்களின் புதியவுரையினின்றும் வேறுபட்டது. அதன் மறுப்பைத் தம்முரைக்கு மறுப்பாகத் தாம்கருதி, அதனால் என்மறுப்புக்கு மறுப்பாகத்தாம் எழுதிச் செந்தமிழில் வெளியிட்டதாகச் சொல்லுகிறார்கள். அவர்கள் முதற்குறிப்பு என் முன்னுரைக்கு மறுப்பாக அமையவில்லை. என்கருத்தின் வேறுபட முன்னே தாம் எழுதியதோருரையைமட்டும் அறிவித்து, என் உரையால் தம்மையும் நான் தாக்கினதாய்க் கடுத்த உளக்கருத்தை மிக வருத்தமுடன் குறிப்பித்தார்கள். அக்குறிப்பில் "என்னுரைக்கு ஏதுவுடன் மறுப்பெதுவும் இன்மையானும், அவர்களை நான் தாக்கினனோ எனும் ஐயங்கொண் டுளையும் குறிப்பாலும், அதைக்குறித்து முதலில் எனைக்கேட்டிருந்தால் அவர்களை நான் கருதகிலா உண்மையினை எளிதி லறிந்திருக்கலாமே என்று அறிவித்தெழுதலானேன். மற்று எவரும் எனக்கு மறுப்பெழுதுவதில், உண்மையிலே கண்ணாய் நான் எண்ணுதலால், சிறிதளவும் வியவேன்; நான் வெறுப்புங்கொள்ளேன்.

இனிச் "செந்தமிழில்" முந்திய தம் புத்துரையை முன்னிதழில் மீட்டும் எனக்குக் காட்டியதோ டமைந்தவர்கள், இவ்விதழில் என்னுரைக்குத் தம் மறுப்பைக் கட்டுரைத்து மிக

விளக்கி விரித்துள்ளார்கள். அதில் அவர்கள் சிறந்ததெனக் கருதுமுறை பொருந்தவரும் ஏதுச் சில தருகின்றார்கள். அவை களை நாம் ஆயுமுன்னே பொதுவாய் அக்கட்டுரையிற் போதரும் ஓர் குறிப்பை முதலில் தருகின்றேன். பாட்டில்வரும் சொற்களுக்கு அவ்வவற்றின் செம்பொருளைக்கொள்ளுவது உரையறமாம். அம் முறையிற்பழையவுரை என்று அவர்கள் சுட்டுகிற என்னுரையைத் தள்ளிவிட இயலாமை உடன்பட்டு, சொல்லளவில் அது பொருந் தும்பொருளெனினும் அதிற் சிறந்த புதியவுரை தமதாகக் குறிக்கின்றார்கள். சொல்நிலையில் பட்டாங்கு என் உரையில் வரும் குறையெதுவும் காட்டவில்லை. அதற்கு மாறாய்ச் சிறந்ததென அவர்கள்தரும் புதியவுரை பொருந்துதற்குப்பாட்டிலில்லாச்சொற் பெய்தும் பலசொற்குச் சொற்குறியாப் பொருட்குறிப்பைச் சேர்த் தும் அடைவுதர முயல்கின்றார்கள். இப்பாட்டைக் கண்ணழித் துச் சொல்முறையே பொருள்விளக்கி "மறுமொழியில்வருமுரண் கள்" எனும் முன் உரையில் மூன்றுமுதல் ஆறுவரை பகுதி (பாராக்)களில் மிகத் தெளிவா யெழுதியுள்ளேன். ஆதலினால் அதை மீண்டும் விரியாமற் சுருக்கி இங்குச் சொல்லுகிறேன்.

இப்பாட்டில், வருதல், தொழுதல், வணங்குதல், அடிவீழ்தல், தழுவுதல், எனும் வினைகள் வருவதனைக் காணுகிறோம். அவை யொவ்வொன்றின் வினைமுதலைத் தேர்ந்துவிடின், சொற்றொடரின் செம்பொருளும், அதனாலே பாடியவர் மெய்க்கருத்தும் தேற்ற மாகும். "வந்தவன்" குகன் என்பதை இதன் முன்பாட்டில் குகன் "ஒருதனியேதான்வந்தான்" என முடித் தலைதடுத்து இதனைத் தொடுத்ததனால் ஐயுறுதற் கிடமில்லை. "தொழுதானை வணங்கி னான்" என்றதனால் தொழுதவன் ஒருவன், வணங்கினவன் வேறொருவன் என்பதுவும் தெளிவாகும். இனி முதலியாரவர்கள், தொழுதலும் அடிவீழ்தலும் பரதன்தொழிலும், வணங்குதலும் தழுவுதலும் குகன்வினையுமாகக் கருதுகிறார்கள். அவ்வாறு கொள்ளின், நின்றாங்குச் சொல்நிலையில் மரபுவழு வருவதனைக் காண் கின்றார்கள். வணங்காமல் குகன் வந்து வாளாநிற்க, அவனை முதற் கைதொழுதோன் பரதனாவான். அவன் தன்னைத்தொழுத

பின்னே குகன் அவனை எதிர்வணங்கி அமைகின்றான். குகனடியில் பரதன் உடனே விழுகின்றான். வீழ்ந்தவனைக் குகன் எடுத்துத் தழுவுகின்றான். இப்பொருள் சொல்லளவில் மரபுவழுவாய் முடியும். இதுவே முன் செந்தமிழாசிரியர் முதலில் தம் *விமர்சனத்தில் விளக்கிய புத்துரையாகும். இவ்வுரை குகனை மரபறியாத காட்டாளாகவேனும், அறிந்திருந்தும் முறைசெய்யாத் திமிருடைய சிறுகுணத்தானகவேனும் காட்டிவிடும். இதன் பிறகு அவனடியில் பரதன்விழத் தான் வயதால் மூத்தமையால் தமையன் முறையால் அவனைக் குகன் தழுவிநின்றானகச் சொல்லளவிற் கொள்ள நேரும். அதுவும் குகன்மேல் செருக்கும் சிறுமையும் சுமத்துவதாகும். இம் மரபுமுரண்களைச் செந்தமிழாசிரியரவர்கட்கு என்னுரையில் எடுத்துக்காட்டினேன். இவ்வழுவிலக்கத் திரு. முதலியாரவர்கள் தம் கட்டுரையிற் சில புதுக்குறிப்புத் தருகின்றார்கள்.

"வந்து" என்பதற்கு குகன் ('கைகூப்பித் தொழுதுகொண்டு') வந்ததாகவும், "தொழுதானை வணங்கினன்" என்பதற்குக் குகன் (தனக்கு) எதிரே (தன் தொழுதலுக்கு எதிர்தொழுதலாகக்) கை கூப்பித்தொழுத பரதனைக் (காலில்விழுந்து) வணங்கினதாகவும், வேண்டியாங்குச் சொற்கூட்டி எழுதுகிறார்கள். ஆகவே, பட்டாங்கு பாட்டிற் சொற்சுட்டாத புதுக்கருத்தைப் பொருந்தவைக்க ஏற்ற பல சொற்றொடரைச் சேர்க்கின்றார்கள். அவ்வாறு அங்கில்லாத பல சொல்லைப் பெய்யாக்கால் நின்றபடி சொற்கிடப்பிற் புதியவுரை விபரீதப்பொருள்தந்து மரபழித்துக் குகனை மிகப் பழித் திழிக்கும் குறிப்பாகும். மேலும் செந்தமிழாசிரியர் பாகவதப்பெருமையினைத் தாமறிந்த அறிவனூன்முறையாலே விளக்குதற்குப் பரதவேந்தன் குகவேடனடிதொழுதலும் பாகவதவேடன் பரதனியலறியாமல் தம்பி எனத் தழுவித் தன் பேரன்புகாட்டலுமாய தனிச்சிறப்பை மிக விரித்துக்கூறினார்கள். அவர்கள் முதற் புத்துரை, கைதொழலும் கால்தொழலும் முதன்முறையிற் பரதனையே செய்வித்து,

---

* செந்தமிழாசிரியர் தம் விமரிசனத்தில் இவ்வாறு சொல்லவில்லை. இவ்வாறுள்ளன பிறவும் அவ்விமரிசன்முதலியனநோக்கி அறிஞர் ஆராய்ந்து அறிந்துகொள்ளற்குரியன. [ப-ர்]

தொழுதாற்கு எதிர்வணங்கித் தன்னடியில் விழுந்தானைத் தான் எடுத்துத்தழுவுதலைக் குகப்பெருமாளருட்செயலாய்க் கூறு கிறது. அவ்வுரையைக் கொள்ளாமல் பரதனையே குகன் முதலிற் கைதொழுதும் கால்வீழ்ந்தும் வணங்கினதாய்த் திரு. முதலியா ரவர்கள் கூறுகிறார்கள். அவ்வளவில் எம்மிடையே கருத்துமுரண் சிறிதுமில்லை.

ஆனால், தன்னடியில்வீழ் குகனைத் தானும் அவனடிபணிதல் தக்கதெனத் தம் விரிந்தவுள்ளத்தால் நினைக்கின்றார்கள். அஃ தொருகால் நல்லதெனப் பிறர்சிலரும் கருதல்கூடும். என்றாலும், கம்பர்கருத் ததுவென்று பாட்டின்சொல் பட்டாங்குச் செம்பொரு ளாற் சுட்டவில்லை. பிறப்பளவிற் சிறப்பெதுவும் கொள்ளாத பழைய தமிழ்நூன்மரபு, பல சால்பும் நிலமாளும் பெற்றிமையும் உடைப் பெரியார் தம் தமையர்க் கன்புடைய வேடர் தம்மைத் தொழுத வுடன் அவரடியிற் றாம் விழுதல் அறக்கடனாய்க்கூறக் காணோம். இனி, கம்பர் அது கருதினரேல், அக்கருத் தைத் தெளிக்கும் சொற்பெய் தினிதுவிளக்காமல் குன்றுதலும் மிகுதலுமாய்ப் பொருள்மயக்கம் புலவர்கொளச் சொல்லமைத்துப் பாடமாட்டார். அடிபணியும் குறிப்புடைய இடத்தெல்லாம், அதைக்குறிக்கும் சொற்பெய்து பாடியுள்ளார். அத்தகைய இடங் கள் பல முன்னுரையிற் சுட்டியதால் விரிவஞ்சித் திரும்பவும் நான் கூறுகிலேன். தொழுதலும் வணங்கலும் பொதுவாகத் தம்மள வில் மண்ணதனில்வீழாத கைகூப்பைக்குறிக்குஞ் சொற்கள். இடத் தாலும் பிறசொல்லின் தொடையாலும் ஓரோவழி விழுந்துதொழற் கும் இவை வருதலுண்டெனினும் அஃது, இன்றியமையாவிடத் தன்றிச் செம்பொருளின் வேறாய சிறப்புவகைப்பொருள்கூறல் முறையன்று. "நடத்தல்" பொதுவாகக் காற்செலவும், சிறப்பாகச் சிலவிடத்து ஊர்திகளின்மேற்செலவும் குறிக்குமெனினும், சிறப்பு வகைச்சுட்டில்லா இடத்தெல்லாம் பொதுப்பொருளே கொள்ளல் முறை. பரியேறி வழிநடந்தான் என்பதுபோல்வருமிடத்து நடத் தற்குச் சிறப்புப்பொருள் இன்றியமையாதாகும். "வாளா வழிநடந் தான்" என்னுங்கால் காற்செலவே கருதல்வேண்டும். அதன்மே லும் ஊர்தலொடு நடத்தல்வினை ஒருபாட்டில் இருவருக்குக் கூறுங் கால் ஒருகாலும் அவ்விரண்டும் ஒருபொருளிற்கொள்ளல் கூடா.

அதுவேபோல் இப்பாட்டில் "அடிவீழும்" வினையோடு "வாளா வணங்கல்" வினை வெவ்வேறாய் இருவருக்கு வருதலினால், வணங்குதலும் அடிவிழுந்தபொருள்குறிக்கும் எனக் கொள்ளல் இயல்முறையி லமைவதன்று. பரதனடி குகன்விழுதல் அறப்பழைய மரபறமாம். குகனடியில் பரதன்விழும்பரிசு தமிழ்ப்பொதுமரபால் ஏலாத சிறப்புவகை. அக்குறிப்பு இங்கு இன்றியமையாததெனக் கொள்ளுதற்கு அவசியமே சிறிதுமில்லை; அதற்கு மாறாய், வேந்தனடிவிழுந்து குகன்வணங்குதல்போல், வேடனுக்கு வெறுவணக்கம் பரதவேந்தன் எதிர்தருதல், பொதுவகையில் மரபறமாயமைவதாகும். ஆதலினால் வணக்கத்தைத் தனிச்சிறப்புவகையாக அடிபணியும் பொருளினிலே கொள்ளுதற் கிப்பாட்டில் ஒரு குறிப்பும் காணவில்லை. தொழுதவந்தார் யாரெனினும் எதிர்வணங்கல் வேந்தனுக்கும் நன்பரபாம். அதனாலே தொழுத குகனைப் பரதன் வணங்குவதும் இயல்பாகும். வணங்கியெதிர்வந்த வேடன், தன்னையெதிர்வணங்கும் வேந்தனடிவிழுதல் அவனளவிற் குடிமைபறம். "கிராதர்க்குவேந்தன்" எனினும், குகன் "கங்கை நாவாய்வேட்டுவனாய்", அயோத்திவேந்தர்க் காளாகும் குடியுமாவான். "நீயார்?" என வினவும் இலக்குவற்குத்"தேவாநின்கழல் சேவிக்கவந்தனென்-நாவாய்வேட்டுவன் நாயடியேன்" என்ற குகன், தன் நாயகனை (இராமனை) ஒக்கின்ற பரதனடிவிழுவதுவே பண்பாகும். இம்மரபே பாட்டின் சொற்பொருளாக யான் முன்பு விளங்கவைத்தேன்.

இனி "அவனுமவனடிவீழ்ந்தான்" என்பதிலுள்ள உம்மையால் வணங்கினான் என்பதற்குக் காலில்விழுந்து வணங்கினான் என்று பொருள்கொண்டதாய்க் கூறுகிறார்கள். ஈண்டு உம்மை "மலரிருந்த அந்தணனுந் தனைவணங்குமவனும்" (பரதனும்) வந்துதொழுத குகனை யெதிர்வணங்கினான், எனக் குறிப்பதால், 'அந்தணனும்' என்பதன் உம்மைபோலச் சிறப்பும்மை; யாவரும் தனைவணங்கத்தக்க பரதனும் குகவேடனை வணங்குஞ்சிறப்பைக் குறிப்பதாகும். அஃதன்றி, பாட்டிற்சொல்லாத முன் மண்வீழ்ந்த பணியொன்றைப் பரதனுக்குச் சுட்டுவதாய் உம்மைக்குப் பொருள்கொள்ள நியாயமில்லை; எள்ளளவும் அவசியமும்

இல்லையாகும். இருமுறை குகன் பரதனடிவீழ்ந்தான் என்பதனைச் சுட்டுவது கருத்தாயின், கம்பர் அதைப் பட்டாங்குச் சுட்டாமல் விடமாட்டார். வாளா "தொழுதானை வணங்கினான்" என்னாமல், தொழுதவனினடிவீழ்ந்தான் என விளக்கந்தந்துரைப்பார். மேலும், தான் முதலிற் பரதனடிதொழுத குகன், தன்னடியிற் பரதன்விழ எடுத்து அவனை மார்போடு தழுவுதற்குத் துணிவானேன்? முதலிற் றன்பணிவுகாட்டி, அடுத்துடனே தன் பெருமிதத்தால் பரதனைத் தான் தழுவி உறவாடுதற்குத் துணிவும் காட்டில், அவனியல்பு குடியபறமா? மரபிறந்த பாகவத மதமரபா? எனைத்தென்றுதெளிதற்கில்லை.

இனி, ஒன்றுவிட்டு இதற்கடுத்தபின்பாட்டில், குகன், பரதனடியில் மறுமுறைபணிதலைக் குறிக்குங்கால் 'மீட்டுமண்ணதனில் வீழ்ந்தான்" என்று கம்பர் தெளித்துக்கூறுகிறார். ஆதலினால் அதற்கு முன்னே மண்ணதனில்விழுந் தடியிற்றொழுதவனும் குகனாவான் என்பதுவே கம்பர் உளக்கருத்தாகும். இவ்விரண்டுபாட்டாலும் விழுந்து அடியிற் பணிந்தசெயல் இருமுறையே நிகழ்ந்ததெனச் செஞ்சொல்லாற் கம்பர் சொல்வர். பின்முறையில் மண்வீழ்ந்தான் குகனென்றுதெளித்ததாலும், அவனே முன் அடிதொழுதான் என்று கவி குறித்ததாலும் இருமுறையும் அடிதொழுதவினைக்குரியான் குகனொருவனே யென்பது விசதமாகும். ஆதலினால், 'அவனுமவனடிவீழ்ந்தான்' எனும் தொடரில், அடிவீழ்ந்த அவன் குகனன்றிப்பரதனாகான். ஆங்கு அகரச்சுட்டெழுவாய்ப்பெயர் பரதனைக் குறிப்பதாய்க்கொண்டால், பின்பாட்டில் குகன் விழுந்து தொழுவதனைச் சுட்டுங்கால், 'மீட்டும்' என்ற அடை மிகையாகும். கம்பர் பாட்டுக்களில் விழுந்துதொழுதல் இருமுறையே குறிப்பதனால், முன்னது பரதனைச் சுட்டில் பின்னதொன்றே குகனதாகும். இந்த இடர்ப்பாட்டை நீக்குதற்கும் எப்படியும் பரதனைக் குகனடியில் வீழ்த்துதற்கும் விரும்பியதால், முன்பாட்டில் 'அடிவீழ்ந்தான்' என்பதனைப் பரதன்மேலேற்றி, வெறும்வணக்கச்சொல்லுக்கு அடிவிழுந்துவணங்கியதாய்ப் பொருளுரைத்து, அச்செயலைக் குகன்செய்தானெனக் குறிக்கநேர்ந்ததென நினைக்கின்றேன்.

விருப்பெதுவும் கொள்ளாமல் சொற்சுட்டும் பொருள்கொள்ளில், 'அடிவீழ்ந்தான்' என்றதனுல் ஒருமுறையும், 'மண்ணதனில்வீழ்ந் தான்' என்பதனுல் ஒருமுறையுமாக அடிபணிதல் இருமுறையே குறித்ததாலும், பின்தொடரில் 'மீட்டும்' என்ற அடையாலே, பின்விழுந்த குகனே முன்னும் வீழ்ந்தான் எனத் தெளித்தவுரை யானும், பரதனுக்கு 'மண்வீழ்ச்சி' கூறுவது கம்பர்கருத்தாகாமை விளக்கமாகும். ஒருபாட்டில் 'அடிபணிதல்' 'வெறும்வணக்கம்' இரண்டுங் கூறி, இருவேறு புருடருக்கு முறையே அவ்விருசெயலும் பிரித்துச்சுட்டில், அவ்விரண்டும் ஒருபரிசாய்க்கொள்ளுவது அற மன்று, முறையுமன்று.

இந்நிலையில், கம்பர்கவிச்சொற்களையும், அவை குறிக்கும் செம்பொருளையும் புறக்கணித்துத் தாம் சிறந்ததெனக் கருதும் பொருளைப் பாட்டிற் புகுத்துதற்கு முனைகின்றார்கள். "'மீட்டு மண்ணதனில்வீழ்ந்தான்' என்பது, குகன் இதன்முன் மண்ணில் விழுந்திருக்கிறுன் என்பதைக் குறிக்குமேயன்றி, பரதன் மண்ணில் விழவில்லை என்பதற்கு ஆதாரமாகாது" என்கிறார்கள். பரதன் மண்ணில்விழுந்ததைச் சுட்டும் சொல் கம்பர்பாட்டிற் காட்டாமல், "மண்ணிலவன் விழவில்லை எனப் பாட்டுக் கூருமையால் பரதனும் விழுந்தவனுவான்" என்று அவர்கள் கொள்ளுவது சாலாது.

இனி, அவர்கள்கட்டுரையில் "கூறப்படாதது அவசியமாக நிகழாததாகாது" எனக் கூறி, பாட்டில் அதைக் கூருமலிருந்தா லும் பரதன் குகனடியில் விழுந்திருக்கலாமென்று குறிக்கின்றார் கள். 'நிகழக்கூடியது' பற்றி என்னளவில் ஆராய்ச்சி நிகழ்த்தவில்லை. நிகழ்ந்ததாய்க் கம்பர்பாட்டுக்கூறுவது யாதாகும் என்பதுவே ஆராய்ச்சிப்பொருளாகும். பாட்டின்சொல், பரதனுக்கு 'மண் வீழ்ச்சி' குறியாமல், வெறும்வணக்கம் தரும்போது, குகனடியில் பரதனுமே விழுந்திருக்கவேண்டுவது சிறந்ததெனக் கூறுவது கூறு பவர்கொள்கையன்றிக் கம்பர்கருத்தாகாது. அந்நிகழ்ச்சி சிறந்த தெனக் கருதுவதை நான் மறுக்கவரவில்லை, அக்கருத்துக் கம்பர் பாட்டில் இல்லையெனச்சொல்லுவதை மறுப்பதற்கு ஆதரவும் பாட்டினின்றும் கட்டுரைப்பார் காட்டவில்லை.

இனி, 'குகன் பரதனெதிர் தொழுது வருதலே இயல்பும் மரபும், இயையும் செயலாம்' என்ற என் எதிருரைத்தொடரை, 'வந்து' என்பதற்கு, 'குகன் கைகூப்பிக்கொண்டுவந்தான்' எனத் தாம் கூறினதற் காதாரம் காட்டுகிறார்கள். என்கூற்று என்கருத்தாய் எழுந்ததன்று; குகன் 'ஒருதனியேதான்வந்தான்', 'வந்தெதிரே தொழுதான்' என்ற கம்பர்சொற்றொடர்களாற் பெற்றதாகும். இது 'வருதலும்', 'எதிர்தொழுதலும்' தொடர்ந் தொருவன்செயலாக நிற்பதனல் கிட்டிய நேர்பொருளாகும். இவ்விரண்டில் எதிர்தொழுதலைப் பிரித்துப் பரதன்வினையாக்கியபின், 'வந்து' என்ற ஒரு சொல்லே வந்துஎதிர்தொழுதலையும் சுட்டுவதாய்க்கூறுவது பொருந்தாது; அது பாட்டில்வரும் சொல்லளவிற் செம்பொருளாய் அமையாது; ஆதலினுல் கம்பர்கருத் ததுவென்று பாட்டைக்கொண்டு கூறுவதும் ஏற்காது.

இனி, இதற்கடுத்தபாட்டில் 'தழுவினபுளிஞர்வேந்தன்' என்பது இப்பாட்டில் 'தந்தையினும் களிகூரத் தழுவினன்' என்றதன் தொடர்பாகுமாதலினுல், தழுவுதொழில் ஈரிடத்தும் பரதன்வினையென்பதுவும் தெளிவாகும். 'பரதன் தழுவின புளிஞர்வேந்தன்' என்றமைந்து இனிது நிற்கும். தழுவினவன் குகனுயின், அவனுடனே தான் தழுவும் இளையவனின் 'சேவடிக்கமலப்பூவில் பூட்டியகையனுகி மீட்டும் மண்ணதனில்வீழ்வது' பொருந்தாதமுரணுகும். தழுவுதல் உயர்வுணர்வும், அடிதொழுதல் தாழ்வுணர்வும் சுட்டிவரும் இருவேறு மெய்ப்பாடாம்; ஆதலினுல் அவையிரண்டும் ஒருவனுக்கு ஒருவன்பால் உடனிகழ்தற் குரியவல்ல.

"மீட்சிப்படலத்தில் இராமன் வெற்றியுடன் மீண்டதனைக்கேட்டுவகைமேலீட்டில் 'தாதியரைத்தொழுதான்' பரதன் என்ற கம்பர், 'கேட்டனன் கிராதர்வேந்தன்' என்று தாம் விதந்துசுட்டும் 'குகன் காலில் பரதன் அன்புமிகுதியால் விழுந்தான்' என்று கூறினர் என்பது பொருந்தாததாகாது," என முடிக்கிறார்கள். அவ்வாறு கம்பர் கூறினர் என்று காட்டியபிறகே அது பொருந்துவதா? பொருந்தாததா? என்ற வாதம் எழுதல்கூடும். அது கம்பர்கூற்றென்பதை அவர்சொற்கொண்டு தெளிக்காமல், கம்பர்கருத் தது

வென்றுகாட்டுதற்குச் சான்ருகத் தாதியரைத்தொழுதசெய்தி சுட்டுவது போதாது. தன் தமையன்மீட்சியிலே பிரிவாற்ருத்துயர் நீங்கித் தானடைந்த உவகையினுல் தனைமறந்த பரதனுளவுணர்வும் அவன் மெய்ப்பாடும் கூறும் கம்பர், அளவிறந்த மகிழ்ச்சியினுல் அறிவழிந்து செயல்மறந்த பரதன் அங்குநின்ற 'தாதியரையும் தொழுதான்' என்றது ஓர் அழகாகும். அன்றியும், ஆண்டெல்லாரும், இராமன்போல் பரதனிருகட்புலனைக் கதுவ, அவன் கைகடந்தகளிவெறியில் உருவெளியால்மயங்கினன் என்பதுவும் அமைவுடைத்தாம். அதுகொண்டு, தான்முன் அறியாக் குகன் தன்முன் வந்தவுடன் பரதனுக்குக் களிபெருகித் தனைமறக்கும் அன்பு அவன்பால் ஊறினதாய்ப் பாட்டின்சொல் காட்டவில்லை. சுமந்திரனுல், வந்த குகன் இராமனுக்குத் துணைவனெனக்கேட்டதனுல் எதிர்காணத் தான் சென்ருன் பரதன் என்பதுவே கம்பர்கூற்று; அது வான்மீகர்சொல்லாத கம்பர் புதுக்கூட்டாகும். அவர்காலத்தில் இராமவழிபாட்டோடு பாகவதவழிபாடும் மிகப் பரவிவிட்டதனுல், குகனுக் கிம்முகம னவர்காட்டுதற்குப் பரதனை யங்கெழுவித்தார். வான்மீகர் கடவுள்நிலைகூருமல் பெரும்பாலும் இராமனை மானிடனுக நடத்துவதால், குகன் வந்து காத்திருந்து அநுமதி பெற்று அருகுவந்து பரதனடிவிழுந்து தரிசித்துக்காணிக்கைதந்து மீண்டான் என்று தெளிவாக்குகிருர். இந்நிலையில் பரதனை வேடனடி விழப்பண்ணும் எண்ணத்தைச் சொல்லாத கம்பர்பாட்டில் அதை நுழைப்பதற்கு நியாயமில்லை. தாதியரைத் தொழும்பொழுது குகனிருந்தால், களிவெறியில் அவனையுமே தொழுதிருப்பான்; அப்பொழுதும் கைகூப்பித் தொழுததல்லால் பரதன் எல்லாரடியினிலும் விழுந்தெழுந்தான் என்று கம்பர் கூறவில்லை. தன்னிலையை அறமறந்து மாபிறந்து வந்துதொழும் தன் தமையன்தொண்டர்களை எப்போதும் தெண்டனிடுபவன் பரதன் என்றும் எங்கும் கம்பர்சொல்லத்துணியாதபரிசை அவர்பாட்டில் ஏற்றல் உரையறமன்று; நல்ல உலகியன்மரபுமன்று.

இன்னும், "இராமன் இராஜகுலத்தினரான குகன் சுக்கிரீவன் விபீடணன் என்பாரைமட்டுமே சகோதரராகச் சுவீகரித்திருக்கிருன். குகன் குலத்தால்மட்டுமின்றி அரசாளுதலாலும் வேந்தன் என்பது குறிக்கத்தக்கது. ஆதலால் குகன்காலிற் பரதன்வீழ்ந்தான்

என் றுரைகூறியவர்கள் சாமானியராகக்கொள்ளல் நியாயமாகாது" என்றெழுதுகிறார்கள். இது இராமனின் இயல்புகுறிக்குமாயின் அவனுக்குப் புகழாகாது. அவன்நட்புப் பிறர்சால்பாலும் தன்பால் அவர்கொண்ட அன்பினாலும் எழுவதன்று; அரசராய்த் தனக்கு முன்பின் உதவத்தக்காரிடம் பெறும் பயனுக்கேற்ப வளருமென் றுரைப்பதாகும். மேலும், "குகன் குலத்தால்மட்டுமன்றி அரசாளுதலாலும் வேந்தன்" என்பது இவர்கள் எண்ணமா? கம்பர் கூறிய கருத்தா? என விளக்கினார்களில்லை. இதில் 'மட்டும்' என்பது மயக்கந்தருகிறது. 'குலத்தாலன்றி' என்றிருந்தால் ஒரு வாறு பொருந்தக்கூடும். 'குலத்தால்மட்டுமின்றி' என்பதனால், குலத்தாலும், அரசாளுதலாலும் குகன் வேந்தனாவானெனக் குறிக் கிறது. குலத்தால் குகன் வேடன், (கிராதன்) "மன்னவர் நெஞ்சினில் வேடர்விடுஞ்சரம் வாயாவோ" என்று குகனே தன்குலமும் பரதன்குலமும் சுட்டுதலால், பரதன்போல் இவன் மன்னர்குலத்தா னல்லன் என்பது அவன் வாய்ச்சொல்லே விளக்குகிறது. நாடாளும் அரசுரிமை குகனுக் கெங்கும் கூறவுமில்லை. "நாவாய் வேட்டுவனாயடியேன்" என்று குகனும், "கங்கை நாவாய்க்கிறை குகன்" என்று இலக்குவனும், "கிராதர்வேந்தன்" என்று கம்பரும் குகனைச் சுட்டக் காணுகிறோம். அதற்குமேல் எந்த நாடும் இவ னாட்சிக்குரியதெனக் கூறக்காணோம். கம்பர்கவிக்கடல்பருகி நூற்றுநூறு கவிமுத்தை நுண்மதியால் மெருகிட்டு ஒளிரச் செய்யும் இப்பெரும்புலவரின் விரிந்த கல்வியாலும் மறவிக்கு மறலியாகி விரும்பின் உடன் எண்ணில்பாட்டெடுத்துரைக்கும் வியத்தக்க நினைவாலும் இவர்களிடம் எனக்கு அச்சம் அதிகமுண்டு. எடுத்தவுடன் எத்தனையோ பாட்டுக்களைக் காட்டக்கூடும். ஆதலி னால் மறுத் தெனக்குக் கவிகாட்டவல்லார்கள் என்பதை நான் மறக்கவில்லை. என்றாலும், எனக்கு நினைவுள்ளவரை குகனுக்கு நாடாட்சி யாண்டுமில்லை. அதனாலே 'அரசாளுதலாலும் வேந்தன்' அவன் என்பதற்கு ஆதரவு பாட்டிலில்லை. நாவாய்க்கிறை' என்பது 'நான், என்மாட்டுக்கிறை' என்பதுபோல் இவனுக்கு நாவாய்கள் உடைமைப்பொருள் என்றவளவே குறிக்குமல்லால் வேத்துரிமை சுட்டாது. 'கிராதர்வேந்தன்' என்பதும், 'குறும்பர்

வேந்தன்', 'கள்ளர்வேந்தன்' என்பவைபோல், வேட்ருக்குத் தலைவன் எனும் அளவே குறிக்குமல்லால் அரசாளும் வேத்துரிமை சுட்டாது. "கங்கையிருகரையுடையான்" என்பதுவும் இருகரைக்கும் இடையோடும் 'கணக்கிறந்த நாவாயான்' ஆதலினல் உபசாரம். கரைநாட்டை ஆளுபவர் காசிவேந்தர்; குகன் (வேட)குலத்தாரல்லர். இவனைக் 'கங்கையின் மருங்குதோன்றும் (சிருங்கிபுர) நகருடைவாழ்க்கையான்' என்று கம்பர் குறிப்பதன்றி ஒரு சீரூரும் ஆளும் வேந்தன் என்றெங்கும் கூறவில்லை. இந்நிலையிற் குலத்தாலோ அரசாளும் பரிசாலோ குகன் வேந்தனுகமாட்டான். குகனைக் குறுநிலமன்னனெனக்கொண்டாலும் அதனாலே பரதன் அவனடி பணிய நியாயமில்லை. நிலமாளும் வேந்தரும், வேந்தர்குடிப் பிறந்தவரும், இராமனுக்கு நண்பரும், அவன் தனக்குத் தம்பியரென்றழைத்தவருமான வீடண சுக்கிரீவர் இருவருமே, பரதன் தாளிற் பணிந்து தொழ, மாறி அவரடிதொழுதுவணங்காமல், "குரக்கினத்தரசை..............அரக்கருக்கரசை வெவ்வேறடைவினில் முதன்மைகூறி மருக்கமழ் தொடையன்மாலை மார்பினன் பரதன் நின்ருன்." அவர்களை அடிதொழாது முகமனேடமர்ந்த அண்ணல் வேட்டுவர்தலைவன்காலில் விழுந்தனன் என்று கம்பர் உரைத்திடின் வியப்பிற்ருகும். நிற்க.

இவ்வியப்பினை முன்னறிந்து, எற்ப விடை யாய்ந்துதருவதுபோல், இன்னுமொரு செய்தியினைக் குறித்துள்ளார்கள். "இராமாயணபுருடரில்...................குகனொருவனே பந்துத்துவமாவது பலாபேட்சையாவது காரணமாக இல்லாமல், கலப்பற்ற அதிபரிசுத்தமான அன்பே காரணமாக இராமனுக்கு அன்புசெய்தவனுவன்," என்பது அவர்கள் கூற்று. இராமனைத் திருமாலின் அவதாரபுருடனென்று குகனறிந்திருந்தான் என்றும் தம் கட்டுரையில் திரு. முதலியாரவர்கள் வற்புறுத்துகிருர்கள். அந்நிலையில் குகன் அன்புசெய்வது பலாபேட்சையில்லாதது என்று சொல்லுவது பொருத்தமாமா? எல்லாம்வல்ல இறைவன்பால் அன்பு காட்டிற் பெறற்கரிய பேரின்பவாழ்வோடு உலகநலம் அனைத்தையும் ஓர்முயற்சியின்றி அடைதல்கூடுமாதலினல், குகன் அன்புக்

கீடில்லை என்பதுவும், அதனாலே பரதன் அவனடிபணிந்தான் என்பதுவும் சாலாது. அளவாலும் தூய்மையாலும் அநுமானும் பரதனும் இராமன்பாற் கொண்ட அன்பு மண்ணுலகில் யாரிடத்தும் கண்டறியாதது; மக்களுக்கே மாட்சிதரும் பெற்றியது. குகன் இராமனை அயோத்தியர்க்கரசனென்று கங்கைக்கரையில் வந்து காணுகிறான். இராமன்வடிவழகும் பெருங்குணமும் கண்டு அவனுக்குத் தொண்டுசெய விரும்புகிறான், என்பதுவே கங்கைப் படலத்திற் கம்பர்கூறும் குகன்நட்பின் துவக்கமும் இயல்புமாகும். அநுமான் முதலில் இராமனைக் காணும்போதே,

"என்பெனக் குருகு கின்ற திவர்கின்ற தளவில் காதல்
அன்பினுக் கவதி யில்லை, அடைவென்கொல் அறிதல் தேற்றேன்"

என்று தன் உள்ளத்து என்றும் முன் உணர்ந்திலாத அன்பெனும் அளக்கர்பொங்கி ஆர்த்தெழுந்து அலைத்து மோதத் தன்னலம் இறையும் இல்லாத்தெய்வவான் தூயநட்பால் தன்னையே அவற்குத் தந்து தான் அவற் காளாகின்றான். குகன் இராமனுக்குச் செய்ததெல்லாம், "ஒருங்கு தேனொடு மீனுபகரித்து," கங்கையாற்றினைக் கடக்க நாவாய் ஒன்றினில் ஏற்றிக்கொண்டு தென்கரை உய்த்ததாகும். அநுமனோ இராமன் செங்கைத்தநுவென நின்று என்றும் துஞ்சாத்துணைவனாகிப் போரினில் வெற்றிதந்தான். இராமனே,

"தீவினை யாம்பல செய்யத் தீர்விலா
வீவினை முறைமுறை விளைவ மெய்ம்மையால்
நீயிவை துடைத்துநின் றளிக்க நேர்ந்ததால்
ஆயினும் அன்பினு யான்செய் மாதவம்."

'என்றுரைத் தநுமனை இறுகப்புல்லினன்'

இனி பரதன் அன்பை ஐயுற்ற இலக்குவற்கு இராமன்கூறும் மாற்றத்தால், அன்னவன் அன்பின்மாட்சி ஓரளவு அறியக்கூடும்:—

"எனைத்துள மறையவை யியம்பற் பாலன
பனைத்திரள் கரக்கரிப் பரதன் செய்கையே,
அனைத்திற மல்லன வல்ல, அன்னது
நினைத்திலை என்வயின் நேய நெஞ்சினால்"

"பெருமகன் என்வயிற் பிறந்த காதலின்
வருமென நினைகையும் மண்ணை யென்வயின்
தருமென நினைகையும் தவிரத் தானையால்
பொருமென நினைகையும் புலமைப் பாலதோ."

* * *

"சேனையர் தருமத்தின் தேவைச் செம்மையின்
ஆணியை அன்னது நினைக்க லாகுமே?
பூணியன் மொய்ம்பினுய்! போந்த தீண்டெனைக்
காணிய நீயிது பின்னும் காண்டியால்"

* * * *

இன்னும் இராமன்பால் அன்புடைய குகனும் பரதனைக் கடுத்துப் பின் உண்மை தேர்ந்து தெளிந்து உரைப்பதுவும் அவனன்பின் தூய்மைகாட்டும்.

"நம்பியுமென் நாயகனை ஒக்கின்றான்...

..........................................

துன்பமொரு முடிவில்லை திசைநோக்கித் தொழுகின்றான்

.........................................."

"உண்டிடுக்க ணொன்றுடையான் (இராமன்பால்) உலையாத அன்புடையான் (இராமன்) கொண்ட தவவேடமே கொண்டிருந்தான்

.........................................."

"தாயுரை கொண்டு தாதை யுதவிய தரணிதன்னைத்
தீவினை என்ன நீத்துச் சிந்தனை முகத்திற் றேக்கிப்
போயினை யென்ற போழ்து புகழினோய் தன்மை கண்டால்
ஆயிர மிராமர் நின்கே ளாவரோ தெரியின் அம்மா"

இவையனைத்தும் குகன்கூற்றாகும். இனி, இராமன்பால் பரதன்கொண்ட அளப்பரும் அன்பைக் கண்டு கோசலைகூறுமாற்றமும் கருதுதற்குரியதாகும்.

"தரும நீதியின் தற்பய னுவதுன்
கரும மேயன்றிக் கண்டிலங் கண்களால்
அருமை ஒன்றும் உணர்ந்திலை ஐயநின்
பெருமை யூழி திரியினும் பேருமோ"

"எண்ணில் கோடி யிராமர்க ளென்னினும்
அண்ணல் நின்னரு ளுக்கரு காவரோ
புண்ணி யம்மெனு நின்னுயிர் போயினல்
மண்ணும் வானு முயிர்களும் வாழுமோ"

இத்தகைய பரதனன்பைக் கேவலம் 'பந்துத்துவ'த்தால் மாசுற்றதாகவும், அநுமனன்பு அவனுக்குத் தலைவனான சுக்கிரீவனுக்கு இராமன் அரசுதவும் என்னும் 'பலாபேட்சை'யால் மாசுற்றதாகவும், குகனன்பொன்றே மாசற்றுயர்ந்த பேரன்பாகவும் கூறுவது திரு. முதலியாரவர்கள்கருத்தாகலாம். ஆனல் அவ்வாறு கம்பர் யாண்டும் கூறினரிலர்; குறிக்கவும் காண்கிலேன். அநுமனுக்குச் சுக்கிரீவன் அரசனுகான்; வாலியே குரக்கினத்தரசன்; ஆதலின், அரசவிசுவாசத்தால் அவன் தலைவனுக்கு ஆட்சிதர இராமன்பால் அன்புசெய்தான் அநுமனென்பது அமைவதன்று. பிலத்தில் வாலி தாழ்த்தபொழுது, அவன் ஆணைக்கெதிராகத் தம்பிக்கு முடிசூட்டித் துணைசெய்த 'இராஜத்துரோக'க் குற்றத்திற்காகச் சுக்கிரீவனோடு வாலியால் நாடகற்றப்பெற்றாருள் அநுமனொருவன். அந்நிலையில் தன்னிடத்து வெறுப்புடைய வாலிக்கு மாறாக அவன் தம்பிக்குதவுவது இயல்பாகும். அஃதன்றிச் சுக்கிரீவனிடத்தே தழையும் உயர்பேரன்புகொள்ளாத அநுமான், அவன்பொருட்டு இராமன்பால் பேரன்புபூண்டு அடிமைத்தொண்டாற்றி நின்றவனைக்கொள்ளுதற்கும், கம்பர்பாட்டில் ஆதரவு போதாது. என்புநெக்குருக நட்டு இராமனுக்கு உடல்போல்நின்ற அநுமனின் தூய அன்பின், அன்பவதாரமான பரதன் தன் அரசையும் விலையிலாத உயிரையும் கைம்மாறின்றித் தரும் அவன் தெய்வவான் தூய அன்பின், தூயது குகனன்பென்பார்துணிவினை மாற்றத்தக்க மாற்றம் நான் சொல்லற்கில்லை.

இனி, மீட்சிப்படலத்தில் இராமனைத்தொழுதபின்னர்க் குகன் 'இளவல் (இலக்குவன்) பொற்றாள் மேயினன்வணங்கி' என்றதொடு கவி விட்டாலும் இலக்குவன் குகனை மாறி எதிரடிதொழுததாகக் கொள்ளுவதவசியம் என்றெழுதுகிறார்கள். அதேபாட்டில் 'இளவல்தாள்' வணங்கியபின்னர்க் குகன் 'அன்னை (சீதை) விரைமலர்த்

தாளில்வீழ்ந்தான்', என்று கம்பர் கூறுகிறார். அடிவிழுந்து குகன் தொழும்போதெல்லாம் அவனால் தொழப்பட்டோர் அவனை மாறி அடிதொழல்வேண்டுமென்றால், சீதையும் குகன்தாளில் விழுந்த னள் என்று கொள்ளல்வேண்டும். அது பொருந்துவதாமா? ஆத லின், கம்பர்கூறாநிகழ்ச்சிகள் கருதிநோக்கி நிகழ்ந்ததாய்நினைத்தல் கூடும். 'அவர் (கம்பர்) கூறாதுவிடுத்தவை நிகழவில்லையென்று கொள்ளல் முறையன்று' என் றிவர்கள் பன்முறையும் வற்புறுத்தி எழுதுவதை நான் மறுக்கவிரும்பவில்லை. ஆனால் அதைக்கொண்டு கம்பர்கூறாத நிகழ்ச்சிகளைக் கம்பர்கூறினதாய்க் கற்பனைசெய்து அவர்பாட்டிற் புகுத்துவதே நான்மறுக்கும் கொள்கையாகும். கம்பர்கூறாச்செய்திகளைத் தம்மறிவால் ஏற்பதெனக் கற்பிப்போர் அவற்றினைத் தம் கூற்றாகச் சாற்றுவதில் தடையெதுவும் எனக் கில்லை. அவற்றைக் கம்பர்கருத்தாக அவர்பாட்டிற் புகுத்தி உரை தருதல் முறையன்றென்பதைமட்டும் வினயமுடன் அறிவிக்க விரும்புகின்றேன். இன்னும் 'அவர்கூறாநிகழ்ச்சி' என் றிவர்கள் கூறியபின், அதைக் கம்பர்கவிக்கருத்தாய் உரைப்பதற்கு நியாய முண்டோ?

இன்னும், 'இராமன்காலத்திலேயே அவன் திருமாலின் அவ தாரம் என்பது உலகறிந்தசெய்தியன்றென்ற என்கூற்றுப் பிழை யென்றும்', 'அந்த ரகசியம் அந்தரங்கமாயிராமல் இராமன்காலத் தாருக்குப் பகிரங்கமாயிருந்தது' என்றும் எழுதி, அதை மெய்ப் பிக்கச் சில மேற்கோளும் காட்டுகிறார்கள். நான் 'இராமன் அவதார புருஷனென்பதை யாண்டும் மறுக்கவில்லை. ஆனால் அவன் திரு மாலின் அவதாரமென்பது தேவரும் முனிவரும் அறிந்ததன்றி அவன்காலத்தில் யாவரும் அறிந்தசெய்தியன்று என்பதுவே நான் கூறினது. முன் திருமால் தயரதன்மகனாயவதரித்து, "கொலை தொழி லரக்கர்தங் கொடுமை தீர்ப்பனென்—லறுவுறு மமாருக் குரைத்த வாய்மையை", "வாசரோருகன்மகன் (வசிட்டன்) மனத்திலெண்ணினன்" எனவும், "ஈதுமுன் நிகழ்ந்தவண்ண மென முனி யிதயத்தெண்ணி", அதைச்சொல்லாமல், நீ வேள்விசெய் யின், "பூதலமுழுதுமாளும் புதல்வரையளிக்கும்" எனத் தயரத னுக்கு வசிட்டன் அவதார இரகசியத்தை மறைத்துக்கூறினதாகத்

திருவவதாரப்படலத்திற் கம்பர் விசதமாக்கியுள்ளார். அதற்கு மாருய், அவதார உண்மை யாவரும் அறிந்ததாயின் அது இரகசிய மாகாதன்றே. நிற்க, என்கூற்றை மறுப்பதற்குத் திரு. முதலியா ரவர்கள் மேற்கோள் மூன்று காட்டுகிருர்கள். அவற்றுள் ஒன்று சிலப்பதிகாரச்செய்யுளடியாகும். அது 'வேதமுதல்வற்பயந்தோன்' இராமன் எனச் சுட்டும் தொடராகும். சிலப்பதிகாரம் கி. பி. இரண் டாம்நூற்ருண்டின் பிற்பகுதியில் எழுந்தது. இராமன்பிறந்தது அதற்கு ஆயிரம் ஆண்டிற்குமேல் முந்தியநிகழ்ச்சியாகும். இதற் கிடையில் இராமவழிபாடு நாடுமுழுதும் பரவியதோர் சமயமாகி, அவன்வரலாறு பற்பலசெய்யுட்களிற் பாடப்பெற்றுவிட்டதனுல், அச்சிலப்பதிகாரக்குறிப்பு இராமன்காலத்து எல்லாரும் அந்தத் தேவரகசியத்தை அறிந்திருந்தார்கள் என்று காட்டாது.

இனி, 'சங்குசக்கரக்குறியுள,...........செங்கண் விற்கரத் திராமன் அத்திருநெடுமாலே' என்று அநுமான் சுக்கிரீவனுக்குச் சொன்னதைத் தம் கூற்றுக்கு ஆதரவாகக் காட்டுகிருர்கள். இவ் விரு வானரரும், இராமனைப்போலவே, இராவணவதைக்காக அவ தரித்ததேவர்களாவர். "வானுளோர் அனைவரும் வானரங்களாய் ........அவதரித்திடுமின்சென்று" என்ற திருமாலின் ஆணைப்படி அவதரித்த தேவர்களானதினுல், திருமாலின் அவதார இரகசியம் அத்தேவ வானரர் அறிந்துரைத்தது எனக்கு மறுப்பாகாது; தேவ ரும் முனிவரும் அஃதறிவர் என்று நான்கூறினதில் அஃதடங்கும். அதுவேபோல், சாம்பனுக்கு அங்கதன்கூறுவதும் எனக்கு மறுப் பாகாது "பாம்பணை யமலனேமற் றிராமனென்று எமக்குப் பண்டே எம்பல்வந்தெய்தச்சொல்லித் தேற்றினுய்", என்பது அங்கதன்கூற்று. இது இராமன் விட்டுணுவின் அவதாரமென் பதை வானரமாய் அவதரித்த தேவர்களான சாம்பனும் அங்கத னும் அறிந்ததைக் காட்டுமன்றி, "இராமன்காலத்தில் எல்லாரும் அறிந்திருந்தார்கள் என்பதற்குச் சான்று' ஆகாது.

இன்னும், குகனுக்குக் கோசலையை அறிவிக்குமுகமாகப் பரதன்கூறும் செய்தியொன்றை என்னை மறுக்கும் ஆதரவாய்ச் சுட்டுகிருர்கள். அது, 'மூன்றுலகு மீன்றுனை முன்னீன்றுனைப்

பெற்றத்தாற் பெருஞ்செல்வம் யான்பிறத்தலால் துறந்த பெரியாள்' என்பதாம். இதுவும் என்கூற்றுக்கு மறுப்பாகச் சாலாது. 'இதனல் பரதனேயன்றிக் குகனும், இராமன் மகாவிட்டுணுவின் அவதார மென அறிந்தவனுகின்றான்' என விளக்கி யெழுதுகிறார்கள். பரத னும், தேவாவதாரம் ஆவதனல், அவனறிந்ததொன்றுகொண்டு உலகறிந்ததென்று கூறுவது பொருந்தாது. அன்றியும், இராமனைத் திருமாலென்று அறிந்து குகன் பத்திசெய்தான் என்று கொண்டால், முத்திதரும் கடவுளுக்குத் தோணிவிடல் அவ னன்பைத் தூயதெனக்காட்டுதற்குப் போதாதன்றே. இன்னும் பரதனல் குக னிதனைக் கேட்டறிந்தால், அவ்வாறு கேட்கும் முன்னே அவ்வுண்மை அவனறியாச் செய்தியாகும். அதனலும் குகன் தன்னைத் திருமாலின் பத்தனெனக்கருதிப் பரதனைத் தன் தம்பியெனத்தழுவுவது தவறோடு தருக்குமாகும். மேலும், பரதன் கூறும் இத்தொடரால் இராமாவதார இரகசியம் அவன்காலத்தில் யாவரும் அறிந்ததெனத் துணிந்துகூற ஒண்ணுது. அரசரெல் லாம் திருமாலின் அவதாரம் என்பது நம்முலகில் உபசாரப் பெருவழக்கு. குறுமன்னர், ஜமீன்தாரர் யாவரையும் தமிழ்ப்புலவர் திருமாலென் றுபசரித்து, 'இராவணனைக் கொன்றவன் நீ', 'சீதை முலையுழுதமார்பா' எனக் கூறுவதைக் கேட்கின்றோம். தசரதன் இறந்தபின் இராமனே அரசனெனக்கருதிய பரதன் அவனை 'விட்டுணுவின் அவதாரம்' எனப் புகழ்வதனல், தேவமறை உல கறிந்த செய்தியெனக் கொள்ளற்கில்லை. இன்னும் எழிலுடைய ஒரு சிசுவின் மறு(மச்சம்) 'சங்குசக்கரக்குறியாகக்கொண்டு, அம் மறுவால் அது திருவுடையதென்று கூறுவது உலகறிந்த உண்மை யாகும். அதனல் அச்சிசுவை, மாலின் அவதாரமென ஒருவருமே கொள்ளமாட்டார். அம்முறையில் உலகியல்கொண்டு உபசாரவழக் காகப் பரதன்வாயால் கம்பர் அதைச் சுட்டினதால் இராமனின் அவதாரத் தெய்வமறை அவன்காலத் தனைவருக்கும் தெரிந்து வெளிப்பட்டதொரு செய்தியென்று காட்டுதற்கு அக்கூற்றுச் சான்றாக அமையாது.

இந்த வாதம் திரு. முதலியாரவர்கள் உரையாராய்ச்சிக்கு எவ்விதத்தும் தொடர்பற்றது. எனை மறுத்த செந்தமிழாசிரியருக்குச் சார்பாகத் தமதகன்ற கல்விவளங்காட்டி எனைத் தாக்கும் விருப்பத்தை இது குறிக்கும். வாதப்போர் நட்பினுக்கே ஏதம்விளைவிக்கு மொரு தீதாகக்கூடியதால், இவர்களிடம் பெருமதிப்பும் மெய்யன்பும் என்ஞான்றும் யானுடையேன் ஆதலினால், இனி இவர்களோடெதிர்த்து இப்பொருள்பற்றி எதுவும் கூறேன். எம்மிருவர்கருத்தினையும் எதுவுடன் இயன்றவரை எழுதிவிட்டோமாதலினால் ஆழ்ந்தாய்ந்து சீர்தூக்கிக் கம்பர்கவிக் கமைந்த பொருள் கொள்வரென நம்பி இதை முடிக்கின்றேன். இன்றுவரை தமிழினுக்குப் பெருந்தொண்டாற்றிவரும் இப்பெரியார் இன்னும் பல்லாண்டிருந்து அகத்தியர்போற் பொதியிற்சாரலணிசெய்து தமிழாராய்ந்து எம்மனோர்க்குக் கம்பர்கவிச்சுவையுணர்த்திவேளாண்மைசெய்துவரச் சிவனருளை வழுத்துகின்றேன்.

பசுமலை,
7—3—1942.

*S. S. Bharati.*

---

# மதிப்புரை

[தொல்காப்பியம் சொல்லதிகாரம் நச்சினார்க்கினியம்:—பதிப்பாசிரியர் திருவாளர் வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்கள். வெளியிட்டோர் சென்னைப் பவாநந்தர்கழகத்தார். விலை ரூபா மூன்று. கிடைக்குமிடம்:—சென்னை வேப்பேரியிலுள்ள பவாநந்தர்கழகம்.]

நமக்குக்கிடைத்துள்ள பழந்தமிழிலக்கணநூல்களுள் தொல்காப்பியம் பெருஞ்சிறப்புவாய்ந்தது. அது எழுத்து சொல் பொருள் எனும் மூன்றதிகாரங்களையுடையது. அதனுள் ஒவ்வோரதிகாரத்துக்கும் தனித்தனி உரைகண்ட வான்றோய் புகழுடைய ஆன்றோர் பலராவர். அந்நூல் முழுதுக்கும் உரையிட்ட பெருமையுடையார் புரைதீர்புலமை யுரையாசிரியரான இளம்பூரணவடிகளும் இச்சகமேத்தும் நச்சினார்க்கினியரும் ஆவர். இவருள் நச்சினார்க்கினியருரையினை முதன்முதல் தமிழுலகுக்கு அச்சிட்டுதவியவர் திரு. சி. வை. தாமோதரம்பிள்ளையவர்களாவர். ஆதரிப்பாரும் பயில்வாருமின்றித் தமிழ் மங்கியிருந்தகாலத்தே பல தமிழ்நூல்கள் சிதல்வாய்ப்படாது காத்து அச்சிட்டுவழங்கிய இவர்களது ஒப்புரவு மிக மிகப் பாராட்டத்தக்கது.

தாமோதரம்பிள்ளையவர்கள் பதித்த தொல்காப்பியச் சொல்லதிகார நச்சினார்க்கினியருரைப்பதிப்பு இதுபொழுது கிடைத்தற்கரியதாயிருப்பதறிந்த சென்னை வேப்பேரி பவாநந்தர்கழகத்தார் வித்துவான் திரு. மே. வீ. வேணுகோபாலப்பிள்ளையவர்களால் நன்குபரிசோதிப்பித்து இப்பதிப்பை வெளியிட்டுள்ளார்கள்.

இது, ஏட்டுச்சுவடிமுதலியவற்றான் அரிதின் ஆராய்ந்துகண்ட பலதிருத்தங்களும், சூத்திரமுதற்குறிப்பு அரும்பத அகராதி விஷய அகராதி மேற்கோளகராதி முதலியனவும், பவாநந்தர்கழக ஸ்தாபகரான திவான்பஹதூர் சரவணபவாநந்தம்பிள்ளையவர்களுடைய வாழ்க்கைவரலாற்றுச்சுருக்கமும் இனிதமையவும், சூத்திரம் உரை

உதாரணம் முதலியன தனித்தனி தெளிவாய் விளங்குமாறு வேறு வேறு அழகிய எழுத்துக்களில் அமையவும் நல்ல காகிதத்தில் திருத்தமாக அச்சிடப்பட்டுளது.

இப்பதிப்பாசிரியர் இதனைத் தமிழறிவும் தமிழ்மொழியின்பாற் பெரும்பற்று முடையவரும் தொல்காப்பியப் பொருளதிகாரவுரை, யாப்பருங்கலவிருத்தி, களவியலுரை முதலிய பல பெருந்தமிழ்நூல்களை வெளியிடுவித்தவரும் ஆன திவான்பகதூர் ச. பவாநந்தம் பிள்ளையவர்களுக்கு உரிமைசெய்திருப்பது பெரிதும் அமைவுடையதாகும்.

பல்வகைக்கொடையினும் நூற்கொடை சிறந்தது. அதிலும் பொருளுணர்ச்சிக்குக்காரணமான சொல்லிலக்கணவரன்முறையெல்லாம் அறுதியிடும் தொல்காப்பியச் சொல்லதிகார உரைநூற்கொடை சிறந்தது. இந்நூற்கொடையால் பவாநந்தர்கழகத்தார் அக்கழகத்தை நிறுவியவருடைய நோக்கம் நன்குநிறைவேற முயன்றிருப்பது போற்றற்குரியது. இவர்கள் மேலும் இவ்வாறே பல பழந்தமிழ்நூல்களைத் தக்க புலவர்களைக்கொண்டு ஆராய்ந்து வெளியிடுமாறு தமிழ்மக்கள் இப்பதிப்பினை ஆதரிப்பார்களாக.

---

சித்திரபாநுவருஷ ஆநந்தபோதினி சுத்த திருக்கணித பஞ்சாங்கம்:—இது, பலவகைக் கணிதப்பயிற்சியுள்ளவரான திரு. C. G. ராஜன் B.A. அவர்களால் கணிக்கப்பட்டது; நாகவேடு. திரு. நா. முனிசாமிமுதலியாரவர்களால் தமது ஆனந்தபோதினி அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது. யாவரும் அறியவேண்டிய பலவகை விஷயங்களையும் வழக்கப்படி விரித்து விளக்குது. இதன்விலை அணா 4. வேண்டுவோர், சென்னை கிருஷ்ணப்பநாயக்கன்குளத்திற்கு மேல்புறம் 6. லாயர் சின்னத்தம்பிமுதலிதெரு, ஆனந்தபோதினி ஆபீஸில் பெறலாம்.

---

## II. செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | ஐந்திணையைம்பது (உரையுடன்) | 0 | 4 | 0 |
| 2. | கணுநூல் (5) இனியதுநாற்பது (உரையுடன்) | 0 | 3 | 0 |
| 3. | *வளையாபதிச்செய்யுட்கள் | | | |
| 4. | புலவராற்றுப்படை | 0 | 3 | 0 |
| 6. | *நேமிநாதம் (உரையுடன்) | | | |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) | 0 | 6 | 0 |
| 8. | திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) | 0 | 8 | 0 |
| 9. | அநுமானவிளக்கம் | 0 | 10 | 0 |
| 10. | அட்டாங்கயோகக்குறள் | 0 | 2 | 0 |
| 11. | *விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம் | | | |
| 12. | *பன்னிருபாட்டியல் | | | |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) | 0 | 4 | 0 |
| 14. | முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் | 0 | 3 | 0 |
| 15. | திருச்செந்திற்கலம்பகம் | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம் | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா | 0 | 3 | 0 |
| 20. | நரிவிருத்தம் | 0 | 2 | 0 |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) | 0 | 8 | 0 |
| 22. | *திருக்கலம்பகம் (ஷை) | | | |
| 23. | *விக்கிரமசோழனுலா | | | |
| 24. | குருமொழிவினாவிடை | 0 | 1 | 0 |
| 25. | கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகைத்திருவிருத்தம் | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத்திருப்பணிமாலை | 0 | 8 | 0 |
| 28. | *சந்திராலோகம் | | | |
| 29. | *சோழவம்சசரித்திரச்சுருக்கம் | | | |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை | 0 | 3 | 0 |
| 31. | பாண்டியம் | 0 | 4 | 0 |
| 32. | மநீஷாபஞ்சகம் | 0 | 8 | 0 |
| 33. | வேளிர்வரலாறு | 0 | 8 | 0 |
| 34. | *அகப்பொருள்விளக்கம் | | | |
| 35. | *திருமந்திரநூறுபாட்டுக்குரை | | | |
| 36. | உவமானசங்கிரகம் | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை | 0 | 2 | 0 |
| 39. | *பழமொழி மூலமும் பழையஉரையும் (முதல் 100 செய்) | | | |
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகைநிகண்டு | 0 | 6 | 0 |
| 42. | அகராதிநிகண்டு | 0 | 12 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 43. | மேகவிடுதூது ... ... ... | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார்சதகம் ... ... ... | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் ... ... ... | 0 | 3 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்) | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் ... ... ... | 0 | 6 | 0 |
| 49. | *கடைவள்ளலார்காலம் ... ... ... | | | |
| 50. | தமிழரும் ஆந்திரரும் ... ... ... | 0 | 4 | 0 |
| 51. | *மதங்கசூளாமணி ... ... ... | | | |
| 52. | கூடற்புராணம் ... ... ... | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் (தமிழ்) ... ... ... | 0 | 6 | 0 |
| | ஷை (ஆங்கிலம்) ... ... ... | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள்விளக்கநிகண்டு ... | 1 | 4 | 0 |
| 55. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ... | 0 | 12 | 0 |
| 56. | பாப்பாவினம் ... ... ... | 0 | 10 | 0 |
| 57. | மதுரைமும்மணிக்கோவை ... ... ... | 0 | 5 | 0 |
| 58. | பழனிப் பிள்ளைத்தமிழ் ... ... ... | 0 | 3 | 0 |
| 59. | கடம்பர்கோயில் உலா ... ... ... | 0 | 6 | 0 |
| 60. | சங்கரநயினார்கோயில் அந்தாதி ... ... | 0 | 6 | 0 |
| 61. | கலைசைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 62. | பெருந்தொகை ... ... ... | 5 | 0 | 0 |
| 63. | சூடிக்கொடுத்தநாச்சியார்தோத்திரப்பாமாலை ... | 0 | 5 | 0 |
| 64. | சிராமலைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 65. | மத்யமவியாயோகம் ... ... ... | 0 | 2 | 0 |
| 66. | சந்திரகுப்தன் ... ... ... | 0 | 6 | 0 |
| 67. | அமிர்தரஞ்ஜநி ... ... ... | 0 | 2 | 0 |

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை,

குறிப்பு:—1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச்"செந்தமிழ்"ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ. 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ. 4—8—0. இதுவரை 38 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ. 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ. 4—12—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி—இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்,

3. சங்கப்பதிப்புப்புத்தகங்களை, ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு, ரூபா ஒன்றுக்கு அரை அணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.